# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆடி 25 திங்கட்கிழமை (10-08-1998) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 218


# ஹட்டனில் ரயில் மீது குண்டுத் தாக்குதல்!

## மலையக சேவைகள் முற்றாக ஸ்தம்பிதம்

கொழும்பு, ஓகஸ்ட் 10

**மலையகத்தில் கண்டியில் இருந்து பதுளை நோக்கிச் சென்று கொண்டிருந்த சரக்கு ரயில் ஹட்டனில் இடம் பெற்ற குண்டுத் தாக்குதலில் தடம் புரண்டது.**

நேற்று முன்தினம் இரவு 9-15 மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவத்தால் 35 இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகப் போக்குவரத்து அமைச்சர் ஏ. எச். எம். பௌசி தெரிவித்தார்.

கண்டியிலிருந்து பதுளை நோக்கிச் சென்று கொண்டிருந்த சரக்குரயிலில் 40பயணிகள் பயணம் செய்தனர்.

இந்த ரயில் ஹட்டன் றொசல்ல ரயில் நிலையத்தில் தங்கி நின்று புறப்பட்ட சமயம் ''ரிமோட் கொன்றோல்'' மூலமாகக் குண்டு வெடிக்க வைக்கப்பட்டுள்ள

(10ஆம் பக்கம் பார்க்க)

## மலையக இளைஞர்கள் 25 பேர் நேற்றுக் கைது

### தோட்டத்தில் தேடுதல்

கொழும்பு, ஒக. 10

ஹட்டன் றொசல்ல ரயில் நிலையத்துக்கு அருகில் இடம்பெற்ற குண்டு வெடிப்பையடுத்து றொசல்ல தோட்டப் பகுதியில் தேடுதல் நடத்திய பொலீஸார் 25 மலையகத் தமிழ் இளைஞர்களைக் கைது செய்து விசாரணைக்காகத் தடுத்து வைத்துள்ளனர்.

அந்தப் பகுதியை நேற்றுக் காலை முதல் சுற்றிவளைத்த பொலீஸார் தமிழர் வீடுகளில் கடும் சோதனைகளை மேற்கொண்டனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)



அப்ப புதைகுழி விவகாரத்திலும் போட்டி கிளம்பி இருக்கோ...!

## பஸ்ஸில் குண்டு

மட்டக்களப்பு, ஒக. 10

வாழைச்சேனை— மட்டக்களப்பு போக்குவரத்துச்சபை பஸ்ஸில் ''ஓடியோ கசற்'' குண்டு ஒன்று இராணுவத்தினரால் மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.

நேற்று நண்பகல் மட்டக்களப்பு நகர் பாலம் சோதனைச் சாவடியில் இச் சம்பவம் இடம்பெற்றது.

பயணிகள் இறக்கப்பட்டு பஸ் சோதனையிடப்பட்ட போது மேற்படி ஓடியோ கசற் குண்டு கண்டெடுக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக எவரும் கைதாகவில்லை.

## லிங்கநகரில் தமிழர்களின் வீடுகளுக்குத் தீ வைப்பு!

கொழும்பு, ஒக. 10

திருகோணமலை மாவட்டத்தில் லிங்கநகர் பகுதியில் வசித்து வந்த தமிழ்க் குடும்பங்களில் 15 குடும்பங்களின் உடைமைகள் வீசப்பட்டு அவர்களது வீடுகள் நேற்றுப்படையினரால் தீவைத்துக்கொளுத்தப்பட்டன.

ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள 'பக்ஸ்' செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அந்தச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;-

லிங்கநகர்ப் பகுதியில் வாழ்ந்த 256 குடும்பங்களையும் வெளியேறுமாறு படையினர் நிர்ப்பந்தம் செய்து வந்ததைத் தொடர்ந்து அப்பகுதியில் பூர்வீகமாக வாழ்ந்து வந்த 80 குடும்பங்கள் அங்கிருந்து வெளியேறிவிட்டன.

இன்னமும் அங்கு 176 குடும்பங்கள் தங்கியுள்ளன.

கடந்த வாரம் அந்தக் காணிக்குச் சென்ற படையினர் காணிக்கு நடுவே வேலி போட்டனர்.

நேற்று நண்பகல் அங்கு வந்த படையினர் 15 குடும்பங்களின் வீடுகளில் இருந்த உடைமைகளை தூக்கி வீசிவிட்டு அந்த வீடுகளுக்கு தீ வைத்தனர். அந்தக் குடும்பங்கள் தற்போது நடுத்தெருவில் விடப்பட்டுள்ளன.

இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து திருகோணமலை மாவட்ட இணைப்பதிகாரியிடமும் டகளஸ்தேவானந்தா நேற்று தொலைபேசி மூலம் முறையிட்டார்.

(இ-3)

## வேலையற்ற பட்டதாரிகள் இன்று உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஒக. 10

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் இன்று முதல் யாழ். செயலகத்துக்கு முன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளது.

காலை 7-30 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ள இந்த உண்ணாவிரதம் சுழற்சி முறையில் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

யாழ். பல்கலைக்கழகத்தின் 1996 ஆம் ஆண்டு பட்டதாரிகளை 1995 ஆம் ஆண்டு பட்டதாரிகளாகக் கருதி ஆசிரியர் நியமனம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை உட்பட 5 கோரிக்கைகளை அவர்கள் முன்வைத்துள்ளனர்.

(இ-3-125)

## புளொட் உறுப்பினர் மீது பிஸ்டல் குழுவினர் சூடு

### வவுனியாவில் பதற்றம்

வவுனியா, ஒக. 10

வவுனியா நகரப் பகுதியில் சிறுவர் பூங்காவுக்கு முன்பாக நேற்று மாலை 7 மணியளவில் புளொட் அமைப்பின் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர் ஒருவர் மீது பிஸ்டல் குழு துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால் பதற்றம் நிலவியது.

மோட்டார் சைக்கிளில் வந்த அவரை நோக்கிச் சைக்கிளில் வந்த இருவர் பிஸ்டலால் சுட்டதாகவும் — அவரும் திருப்பிச் சுட்டதாகவும் —

அவர் காயம் எதுவும் இன்றித் தப்பியதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

பிஸ்டல் குழு உறுப்பினர் இருவரும் தப்பி ஓடிவிட்டனர் என்றும் —

அதையடுத்து அப்பகுதியில் தேடுதல் இடம்பெற்றதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

சிறுவர் பூங்காவில் ஏராளமானவர்கள் கூடியிருந்தனர். அவர்கள் பதற்றத்துடன் பாதுகாப்புத் தேடினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-164)

## வவுனியா நகரப் பகுதியில் எரிபொருள் தட்டுப்பாடு

வவுனியா, ஒக. 10

வவுனியா நகரில் எரிபொருள் விநியோகம் ''பெர்மிட்'' முறைக்கு மாற்றப்பட்டதையடுத்து எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வாகனங்களுக்கு வழங்கப்படும் எரிபொருள்கள் போதாமையாக இருப்பதால் வாகன ஓட்டங்களும் குறைந்துள்ளதாகவும் —

எரிபொருள் பெறுவதற்கான பெர்மிட்டை பெறுவதற்காக ஏராளமானவர்கள் ரம்மியா ஹவுஸில் கியூவில் காத்திருப்பதாகவும் — தெரிவிக்கப்பட்டது

மோட்டார் சைக்கிள்களுக்கு 20 லீற்றரும், ஓட்டோக்களுக்கு 90 லீற்றரும், கார் போன்ற வாகனங்களுக்கு 60 லீற்றரும் மாதாந்தம் வழங்கப்படுவதாகவும்—

அந்த அளவு 10 நாள்களுக்குக் கூட போதுமானதல்ல என்றும் — பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

(இ-3-164)

## செம்மணி போன்று கிழக்கிலும் புதைகுழிகள்

### போராட்டத்துக்கு முஸ்தீபு

மட்டக்களப்பு. ஒக. 10

வடக்கில் செம்மணி, கிழக்கில் மட்டக்களப்பு. அம்பாறை ஆகிய இடங்களில் உள்ள மனித புதைகுழிகளைத் தோண்டி விசாரணை மேற்கொள்ளுமாறு கோரி கிழக்கில் தமிழ்க்கட்சிகள் வெகுஜனப்போராட்டம் நடத்தவிருக்கின்றன.

ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பு இந்த வெகுஜனப் போராட்டத்துக்கான ஏற்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வீடு, வீடாகச் சென்று ஐ. தே. க. எதிர்ப்பிரசாரம்

### வெள்ளி கண்டனக் கூட்டம்

கொழும்பு, ஒக. 10

மாகாணசபைத் தேர்தல்களை அரசு ஒத்திவைத்ததைக் கண்டித்து ஐ. தே. க. வீடுவீடாகச் சென்று எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவிருக்கிறது.

வீடு, வீடாகச் சென்று அரசின் ஜனநாயக விரோதச் செயலை எடுத்துக் கூறி அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க ஐ.தே.க. ஏற்பாடு செய்துள்ளது.

அதேநேரம்—எதிர்வரும் வெள்ளிக்கிழமை கொழும்பு ஹைட்பார்க் கோணர் சதுக்கத்தில் மாபெரும் எதிர்ப்புக் கூட்டம் ஒன்றை நடத்தவும் ஐ.தே.க. திட்டமிட்டுள்ளது.

(இ-3)

## ஈ. பி. டி. பி. தூதுக்குழு ஜனாதிபதியைச் சந்திக்கும்

கொழும்பு, ஒக. 10

வடபகுதி மக்களுக்கான நிவாரண வெட்டு, செம்மணி புதைகுழி விவகாரம் ஆகியன தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் ஈ.பி.டி.பி. தூதுக்குழு இந்த வாரம் பேச்சு நடத்தவிருக்கிறது.

ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் செல்லும் தூதுக்குழு ஜனாதிபதியுடன் மற்றும் பல விடயங்கள் குறித்தும் பேச்சு நடத்தும்.

பேச்சு நடத்துவதற்கு சம்மதம் அளித்துள்ள ஜனாதிபதி, சந்திப்புக்கான திகதி குறித்து இன்று அல்லது நாளை அறிவிப்பார் என்று ஈ. பி. டி. பி. நாடாளுமன்ற உறுப்பினர் எம். சந்திரகுமார் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

**COMPUTERS FOR SALE**

Pentium mmx - 233 mhz

Pentium mmx - 166 mhz

Forfurther details:

V. Kularatnam

273/11, Stanley Road, Jaffna,

(D/4508)


# தமிழர்களை திருப்பி அனுப்புவதை ஜேர்மன் அரசு கைவிட வேண்டும்

## ஜோஸப் எம். பி. கோரிக்கை

கொழும்பு, ஒக. 10

இலங்கையில் மனிதஉரிமை மீறல்கள் முன்னயை காலங்களைப் போன்று அதிகளவில் காணப்படாத போதிலும் கணிசமான அளவு காணப்படுகின்றன. எனவே ஜேர்மனியில் இருந்து தமிழ் மக்களைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கையை கைவிட வேண்டும்''

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோஸப்பரராஜசிங்கம், ஜேர்மன் நாடாளுமன்ற உறுப்பினர் அரொன் ஹதின்டர்ரிஸன் தலைமையிலான மனித உரிமைகள் குழுவினரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜேர்மனியில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கை அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்பக்கூடிய சூழ்நிலை உள்ளதா என ஆராயும் நோக்கிலே இந்தக் குழு அண்மையில் இலங்கை வந்தது.

இவர்கள் கடந்த வாரம் ஜோஸப்பரராஜசிங்கம் உட்பட பலரைச் சந்தித்துப் பேசியதாகத் தெரிய வருகிறது.

ஜேர்மன் தூதுக் குழுவினர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோஸப்பரராஜசிங்கத்திடம் இதனைப்பற்றி விசாரித்த போது, நாட்டில் கடந்த சில வாரங்களுக்கு முன் பல இளைஞர்கள் காணாமற் போயுள்ளார்கள் என்றும், யாழ்ப்பாணத்தில் காணாமற்போன இளைஞர்கள் பலர் செம்மணியில் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகங்கள் எழுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

குழுவினரிடம் அவர்மேலும் தெரிவிக்கையில்.

அண்மையில் நடந்த சார்க் மாநாட்டை யொட்டி பல நூறு தமிழ் இளைஞர்கள் தெற்கில் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தசூழ்நிலையில் ஜேர்மனியிலிருந்து தமிழர்களைத் திருப்பி அனுப்பினால் அவர்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்தே கைது செய்யப்படுவார்கள். ஏனெனில் இவ்வாறான பல சம்பவங்கள் கடந்த காலங்களில் நடைபெற்றுள்ளன என்றார்.

இதேவேளை, இனப்பிரச்சினை தொடர்பாகவும் ஜேர்மன் குழுவினர் ஜோஸப்பரராஜசிங்கத்திடம் கேட்டு அறிந்து கொண்டனர்.

இனப்பிரச்கினை தொடர்பாக அரசு தீர்வுப்பொதி ஒன்றைத் தயாரித்துள்ளது. ஆனால் தற்போது அது குறித்து எத்தரப்பினரும் பேசுவதில்லை என்று ஜோஸப்பரராஜசிங்கம் அவர்களிடம் தெரிவித்தார்.

அத்துடன் ஜேர்மனியில் கூடுதலான தமிழர்கள் அகதிகளாக இருப்பதனால் ஜேர்மன் அரசும் இந்தப் பிரச்சினையில் கூடுதல் அக்கறை கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

(இ-6-10)

## குளங்கள் கால்வாய்கள் புனரமைப்பு

நெல்லியடி, ஒக 10

யாழ். மாவட்டத்திலுள்ள அரச சார்பற்ற பொது நிறுவனங்களின் அனுசரணையுடன் அச்சுவேலி தெற்கு விவசாயிகள் சம்மேளத்தினரால் அப்பகுதியில் சேதமடைந்திருக்கும் குளங்கள், கால்வாய்கள், வீதி ஓரங்கள் செப்பனிடப்பட்டு வருகின்றன.

சுமார் எண்பதுக்கு மேற்பட்ட தொழிலாளிகள் இப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

(இ-109)

## ஐ. தே. கவிலிருந்து பிரிந்த குழுவினர் புதிய கட்சி

கொழும்பு, ஒக. 10

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்த தென்பகுதியைச் சேர்ந்த குழுவொன்று ஐக்கிய மக்கள் கட்சி (யு. பி. பி.) என்ற பெயரில் புதிய கட்சி ஒன்றை அமைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த புதிய கட்சியின் அமைப்புச் செயலாளரான முன்னாள் பிரதி தொழில் அமைச்சர் ஆர். பியசிறி அடுத்த சில நாள்களில் தேர்தல் ஆணையாளரைச் சந்திக்கவுள்ளார்.

இந்த சந்திப்பின் போது புதிய கட்சியைப் பதிவு செய்வது குறித்து ஆராயப்படும்.

இக் கட்சியின் யாப்பு ஏற்கனவே வரையப்பட்டுள்ளது என்றும் —

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் இக்கட்சி வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் எனவும் — கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-6)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா ஆறுமுகம்

(முன்னாள் கிராமசபை உறுப்பினர், உடுப்பிட்டி)

கொற்றாவத்தை, பூவோடையைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா ஆறுமுகம் அவர்கள் 09 - 08 - 1998 அன்று காலமானார்.

அன்னார் மீனாட்சிஅம்மாவின் அன்புக் கணவரும், திருமதி தங்கராணி தேவராசா, தங்கராசா, தங்கரூபன் (ஆசிரியர், கெருடாவில் இ. த. க. பாடசாலை), தங்கமலர், தங்கேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், தேவராசா, சதீஸ்வரி, மாலினி (வீதி அபிவிருத்தி திணைக்களம், பருத்தித்துறை) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-8-1998) நண்பகல் 12.00 மணிக்கு எள்ளங்குளம் மயானத்தில் நடைபெறும்.

தகவல்:

ஆ. தங்கரூபன்

(ஆசிரியர், கெருடாவில் இ.த.க.பாடசாலை)

(சி/4509)

## ஐயப்பன் சங்கரன்

(உரிமையாளர்; சுபாஸ் கபே, சுபாஸ் ரூரிஸ்ட் ஹோட்டல்)

யாழ்ப்பாணம் 37 விக்டோரியா வீதியைச் சேர்ந்த திரு ஐயப்பன் சங்கரன் அவர்கள் 08. 08. 98 அன்று இந்தியாவில் காலமானார்.

அன்னார் திருமதி லச்சுமி அம்மாளின் அன்புக் கணவரும், ஷிகரன், நிமலாகரன், திவாகரன், தயாகரன், கஜாகரன் சீலாதேவி, சுதாகரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் ஹேமமாலினி, சுனந்தா, நந்தினி, அருணா, சுப்பிரியா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இந்தியாவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:

S. இராமையாச்செட்டியார்

(அன் சன்ஸ்)

172, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

''மனோ வாசம்''
காணிப்பையூர்,
குன்னங்குளம்,
கேரளா,
இந்தியா.

(58234)

## சீனியர் நல்லையா

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், ஞானவைரவர் வீதி, கோண்டாவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட சீனியர் நல்லையா 09-08-1998 இல் காலமானார்.

அன்னார் திருமதி நல்லையா இரத்தினம்மாவின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற நல்லையா கனகசபாபதி, திருமதி அம்பிகாபதி—ஜெயகௌரி, திரு. ரு. வரதராஜா, திருமதி அன்னலிங்கம்—யோகராணி (கனடா), திருமதி தியாகராஜா—யோகேஸ்வரி (ஜேர்மனி) திரு. ரு. லிங்கேஸ்வரன், திருமதி குகானந்தன் சரோஜினிதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10-08-98) திங்கட்கிழமை முற்பகல் 11-00 மணியளவில் கோண்டாவில் இந்து மயானத்துக்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

நல்லையா வரதராஜா

நல்லையா லிங்கேஸ்வரன்

(மக்கள்)

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(58245)

## தம்பு முத்துக்குமாரு

தம்பு முத்துக்குமாரு நேற்று(9-8-98) 12.30மணியளவில் காலமானார்.

அன்னார் கல்லாரை (வீரபத்திர கோவிலடி) மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சுபத்திரா தேவியின் அன்புக் கணவரும் த. ஐயாத்துரையின் பாசமிகு தம்பியும், பாசமிகு உருத்திரபூவதி, தேவகுமார் (நேரக் கணிப்பாளர் வ. சி. கூ. தாபனம்), சிவகுமார் (அளவெட்டி ப. நோ. கூ. சங்கம் எரிபொருள் விற்பனையாளர்), குமாரசுபம் (ஒப்பந்தகாரர்-அமெரிக்கா), இராசகுணம் ஆயோரின் பாசமிகு தந்தையுமாவார், பாசமிகு ஹரிச்சந்திரன் (காங்கேசன். சி. மொ. கூ. தாபனம் பாதுகாப்பு உத்தியோகத்தர்), கலாவல்லி (ஆசிரியர், குளமங்கால் மல்லாகம்), தவமணிதேவி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

ம. ஹரிச்சந்திரன்

(மருமகன்)

கல்லாரை, மல்லாகம்.


SHAMROCK

A/L 2000

PHYSICS

திரு. ஸ்பெல்மன்

அதிர்வுகளும், அலைகளும்

ஆரம்பம்: 12-08-98

(புதன்)

2.00 p. m.

(58238)

ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.

இந்தியாவில் 200 நாள்களுக்கு மேல் ஓடிய

சிவாஜி - ராதா ஜனகராஜ்-வடிவுக்கரசு சத்தியராஜ் நடித்த

முதல் மரியாதை

( குடும்பச் சித்திரம் )

தினசரி

10-30 — 2-00, 5-00

(புதிய நேரம்)

(சி/4489)

நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்

இன்று முதல்

சுப்பர் ஸ்ரார் ரஜனி நக்மா நடித்த

பாட்ஷா

திரைப்படக் கூட்டுத்தாபன ( ரீல்ஸ் ) படம்.

காட்சிகள்:- 10-30, 2-30

(58231)

லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

திங்கள், செவ்வாய்

அருண்குமார், மந்த்ரா

ப்ரியம்

புதன், வியாழன்

சிவாஜி - சாவித்திரி கண்ணாம்பாள் நடித்த

காத்தவராயன்

நேரம்:- 10-30, 2-30

(பழைய நேரம்)

Tele. No. 070-212223

(58135)

நேற்று நடைபெற்ற

புலமைப் பரிசில்

பரீட்சை வினாத்தாள் விற்பனையாகிறது.

யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சிப் பகுதி புத்தகக் கடைகள் அனைத்திலும் பெறலாம்.

மேலதிக தொடர்பு:

BOSCO INSTITUTE

25, Racca Road,

புலமைப் பரிசில்

ஆண்டு - 99

புதிய வகுப்புகள்

ஆரம்பம்:

10 - 08 - 98

மாலை 3-00 மணி

(58248)

புலமைப்பரிசில் -1999

புதிய மாணவர்களை வகுப்புகளுக்கு சேர்த்தல்

1 ஆம் பிரிவு

போட்டிப் பரீட்சை

12 - 08 - 98 மதியம் 1-00 மணிக்கு.

( 30 மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர் )

BOND

யாழ். நகர்.

(58247)

எமது புதிய வீடியோCDவெளியீடு

சத்தியராஜ் - குஷ்பூ நடித்த

கல்யாண கலாட்டா

வீடியோ விமல்

யாழ்ப்பாணம்.

(சி/4507)

தேவை

லிபேட்டி தொலைத் தொடர்பகத்துக்கு

மூன்று பெண்கள் தேவை

ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும்.

அச்சுவேலிக்கு அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

நேரில் தொடர்புகொள்ளவும்.

உரிமையாளர்

லிபேட்டி தொடர்பகம்,

அச்சுவேலி.

(58244)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூதரகங்கள் மீதான தாக்குதல்:

# புதிய இஸ்லாமியக் குழு உரிமை கோருகின்றது?

டோஹா, ஒக. 10

நைரோபியிலும், டார் — எஸ் — சலாமிலும் அமெரிக்கத் தூதரக இல்லங்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களுக்கு முன்பின் தெரிந்திராத இஸ்லாமிய தீவிரவாதக் குழு ஒன்று உரிமைகோரி இருப்பதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன.

கட்டாரில் உள்ள 'அல் — ஜெசிரா' என்ற செயற்கைக்கோள் ஒளிபரப்பிற்கு இக்குழுவினர் தொடர்பாகப் பல அறிக்கைகளை அனுப்பி வைத்துள்ளனர்.

உலகெங்கும் உள்ள இஸ்லாமிய புனிதப் போர் வீரர்கள் மற்றும் அனைத்து முஸ்லிம் மக்கள் அமைப்பையும் சேர்ந்தவர்கள் என்று இக்குழு தன்னை அடையாளங் காட்டியுள்ளது.

அரேபிய தீபகற்பத்தில் இஸ்லாத்தின் புனித நிலத்தை அமெரிக்கப்படைகள் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதால் இந்த தாக்குதல்களை நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாக இக்குழு தெரிவித்துள்ளது.

# குண்டு வெடிப்பில் பலியானோர் 132 ஆக உயர்வு! 4,500 பேர்காயம்!

## இந்தியத் தூதரகமும் சேதம்!

நைரோபி, ஒக. 10

கிழக்கு ஆபிரிக்க நாடான கென்யாவின் தலைநகர் நைரோபியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 132 ஆக அதிகரித்துள்ளது. 4 ஆயிரத்து 400-ற்கும் அதிகமானோர் காயமடைந்ததாக கென்யாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தன்சானியா தலைநகர் டார்- எஸ்- சலாமில் நடத்தப்பட்ட தாக்குதலில் 6 பேர் கொல்லப்பட்டதாகவும், 74 பேர் காயமடைந்ததாகவும் பொலீஸார் கூறியுள்ளனர்.

கென்யாவில் நடத்தப்பட்ட தாக்குதலில் இந்தியத் தூதரகக் கட்டடமும் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இத் தாக்குதலில் இந்தியத் தூதரகத்தைச் சேர்ந்த 4 ஊழியர்களும், இந்தியவம்சாவளியைச் சேர்ந்த 4 குழந்தைகளும் காயமடைந்துள்ளனர். தாக்குதல் சமயம் அவ்வழியே பஸ்ஸில் சென்று கொண்டிருந்த குழந்தைகளே காயமடைந்ததாக இந்தியத் தூதர் தெரிவித்துள்ளார்.

குண்டு வெடிப்பினால் ஏற்பட்ட அனர்த்தம் குறித்து இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் கென்யா, தன்சானியா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் தலைவர்களிடம் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச அளவில் பயங்கரவாதம்பரவுவதைஎதிர்த்து சமாளிப்பதற்கு திறம்பட்ட விதத்தில் ஒத்துழைக்கும்படி உலக நாடுகளை அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## அ. தி. மு. க கூட்டணி நிராகரிப்பு!

சென்னை, ஒக. 10

இந்தியாவில் காவிரி நதி நீர்ப்பிரச்சனை தொடர்பாக தமிழ்நாடு, கர் நாடக மாநிலங்களுக்கிடையில் ஏற்பட்ட பொது உடன்படிக்கையை அ. தி. மு. கவும் அதன் கூட்டணிக் கட்சிகளும் நிராகரித்திருக்கின்றன.

இந்த உடன்படிக்கை தமிழ் நாட்டின் நலன்களுக்கு எதிரானது என்று நேற்று முன்தினம் சென்னையில் வெளியிட்ட கூட்டறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-6)

## எதிரணியின் கடைசிக் கோட்டையான

# மஷார் - ஏ - ஷரீப் நகரை தலிபான் கைப்பற்றியது!

காபூல், ஒக. 10

ஆப்கானிஸ்தானில் தலிபான் படையினர் எதிரணிப் படைகள் வசம் இருந்த கடைசி நகரமான மஷார் ஏ ஷரீப்புக்குள் புகுந்து எதிரணியின் முக்கிய நிலைகளைக் கைப்பற்றி விட்டனர். அங்கிருந்த ஈரான் தூதரகமும் தலிபான்களால் கைப் பற்றப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாலையில் நடத்தப்பட்ட ரொக்கட் தாக்குதல்களையும் விமானக் குண்டு வீச்சுக்களையும் தொடர்ந்து தலிபான் படையினர் தங்கள் நகர்வை ஆரம்பித்தனர். நகரின் முக்கிய நிலைகளைக் கைப்பற்றி தமது நிலைகளைப் பலப்படுத்திக் கொண்டு முன்னேறினர் என்று சுயாதீன செய்தி ஏஜென்சிகள் ஊர்ஜிதம் செய்துள்ளன.

ஆனால் தாம் நகரம் முழுவதையும் இழக்கவில்லை என்றும் சாலைகளில் மோதல்கள் தொடர்கின்றது என்றும் தலிபானுக்கு எதிரான கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

மஷார் - ஏ - ஷரீப் நகரின் வீழ்ச்சியானது தலிபானுக்கு எதிரான கூட்டணியை ஆதரித்த நாடுகளுக்கு பேரிடியாக அமைந்துள்ளது.

ஆப்கானிஸ்தானுடனான தஜிகிஸ்தான் எல்லைப் பகுதியில் ரஷ்ய எல்லைக் காவற் படையினர் படைகளைக் குவித்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தலிபான் படையினர் மஷார் ஏ ஷரீப் நகரைக் கைப்பற்றுவதோடு தமது இராணுவ நடவடிக்கையை நிறுத்தாமல் தமது நாடுகளின் எல்லை வரைக்கும் முன்னேற முற்பட்டால் அகதிகளும், ஆயுதங்களும் [illegible] நுழைந்து விடக் கூடும் எனக் கருதும் மத்திய ஆசிய நாடுகளின் தலைவர்கள் அவசர அவசரமாகப் பல சந்திப்புக்களை நடத்தியுள்ளனர்.

(ஐ-6)

## ஈரான் பிரஜைகளின் பாதுகாப்பு அச்சுறுத்தல்

காபூல், ஒக. 10

தலிபான் படையினர் மஷார்-ஏ- ஷரிப் நகரை கைப்பற்றியதைத் தொடர்ந்துஅங்குதங்கியுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளின் பாதுகாப்புக் குறித்து கவலை எழுந்துள்ளது.

மஷார்-ஏ-ஷரிப்பில் உள்ள ஈரான் நாட்டு இராஜதந்திரிகளின் பாதுகாப்புக்கு பாகிஸ்தானும் தலிபான் இயக்கமும் பொறுப்பேற்க வேண்டும் என்றுஈரான் வெளியுறவு அமைச்சர் கமால்கராஷி தெரிவித்துள்ளார்.

தலிபான்கள் அண்மைக் காலத்தில் நடத்திய தாக்குதல்களில் பாகிஸ்தான் நேரடியாகக் கலந்து கொண்டது என்றும்—

அண்டை நாடொன்றின் பேராசையினால் தமது பிரதேசத்தின் பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படுவதை தெஹ்ரான் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்றும்—

கமால்கராஷி தெரிவித்தார்.

(ஐ-6)

## தென் கொரியாவில் வெள்ள அழிவுகள்!

சியோல், ஒக. 10

தென் கொரியாவில் ஏற்பட்டுள்ள வரலாறு காணாத பெரும் வெள்ளப் பெருக்கு காரணமாக 300-க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர் என்றும், 60-க்கும் அதிகமானோரைக் காணவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளம் பல கிராமங்களுக்குள் புகுந்து கொண்டுள்ளதனால் 26 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் உதவி வழங்கும் முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

தலைநகர் சியோலிலும் அதனைச் சுற்றியும் [illegible] ஆயிரம் வீடுகள் நீரில் மூழ்கி இருக்கின்றன. (ஐ-6)

# பெரு பிரதமர் ராஜினாமா!

லீமா, ஒக. 10

பெருவின் பிரதமர் ஜாவியர் வலிரீஸ்ட்ரா தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார். எனினும் அவரது பதவி விலகலை அதிபர் பிஜிமோறி உத்தியோக பூர்வமாக ஏற்றுக் கொள்ளவில்லை.

பிரதமருக்கும், அமைச்சரவையில் உள்ள அமைச்சர்களுக்கும் இடையே அண்மைக்காலமாக கெடுபிடி நிலை நீடித்து வந்தது. அத்துடன் பெரு இராணுவத்தினருடனும் அவர் முரண்பட்டிருந்தார்.

(ஐ)

## கடாபியைக் கொல்ல சதி என்ற கூற்றுக்கு மறுப்பு

லிபியத் தலைவர் முஅம்மர் கடாபியைக் கொல்ல பிரிட்டிஷ் ஏஜென்டுகள் முயற்சித்தனர் என்று கட்சி மாறிய பிரிட்டிஷ் உளவு ஏஜென்ட் அதிகாரி ஒருவர் கூறியதை பிரிட்டன் மறுத்துள்ளது.

கடந்தவார இறுதியில் பாரிசில் கைதுசெய்யப்பட்ட முன்னாள் பிரிட்டிஷ் உளவு சேவை உறுப்பினரான டேவில் ஷய்லர் என்பவரால் இக் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வெளி

உலக அரங்கில்

விவகார அமைச்சின் பேச்சாளர் கருத்துத் தெரிவித்த போது கடாபியைக் கொல்ல பிரிட்டன் ஏஜென்ட்கள் முயற்சித்தனர் என்ற செய்தி உண்மையற்றது.

ஷய்லர், நியூயோர்க் ரைம்ஸிலும், பின் லண்டன் கார்டியனிலும் இது குறித்து கூறியிருந்தார்.

பிரிட்டனில் வெளிவிவகார உளவு சேவையான எம் 16 1996ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதம் கடாபியின் மோட்டார் காருக்கு அடியில் குண்டுவைக்க திட்டமிட்டது. எனினும் குண்டு தவறாக வேறொரு காருக்கு அடியில் வைக்கப்பட்டதால் பலர் கொல்லப்பட்டனர் என்று அவர் கூறினார்.

ஷய்லருடன் கைது செய்யப்பட்ட இன்னொரு உளவு ஏஜென்டான ரிச்சாட் டொம்லின்சன் பின்னர் விடுவிக்கப்பட்டபோதும் பிரிட்டிஷ் உளவுசேவை இரகசியங்களை வெளியிட்டு விடுவார் என்ற அச்சத்தில் தற்காலிக மறத்தல் ஊசி போடப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார். (ஐ-10

## இணக்கம் ஏற்படவில்லை

கொங்கோ ஜனநாயகக் குடியரசுக்கும் (முன்னாள் ஸயர்) அயல் நாடான றுவாண்டாவுக்கும் இடையே துட்ஸி இனத்தவரின் கிளர்ச்சி தொடர்பாக ஏற்பட்டிருக்கும் இழுபறியை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் ஏழு ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் சந்தித்த உச்சி மாநாட்டில் எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லை.

கொங்கோவில் அதிபர் லோறன் கபிலாவுக்கு எதிராக துட்ஸி இனத்தவர் தொடக்கியுள்ள கிளர்ச்சிக்கு றுவாண்டா ஆதரவு வழங்குவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இக் குற்றச்சாட்டை றுவாண்டா மறுத்துள்ளது.

சிம்பாப்வே தலைநகர் ஹராரேயில் நடந்த உச்சி மாநாட்டில் இணக்கம் ஏற்படாததைத் தொடர்ந்து சண்டைகள் மேலும் தீவிரமடைந்துள்ளன. (ஐ-6)

## இராமகிருஷ்ண மிஷன் பொது தலைவர் சுகயீனம்

கல்கத்தா, ஒக 10

உலகெங்குமுள்ள இராமகிருஷ்ண மிஷன் நிலையங்களின் பொதுத்தலைவர் ஸ்ரீமத்சுவாமி பூதேசானந்தஜி மகராஜ் நோய்வாய்ப்பட்டு கடந்த 05 ஆம் திகதி முதல் கல்கத்தாவில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

97 வயதான பூதேசானந்த மகராஜின் உடல் நிலை கவலைக்கிடமான நிலையில் இருப்பதாக கல்கத்தா வைத்தியசாலை வட்டாரங்கள் கூறியுள்ளதாக கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகணனாந்தஜி தெரிவித்தார்.

(ஐ-10)


## வாழ்த்துகின்றோம்

எமது மன்றத்தின் முன்னாள் ஆசிரியர்
மிருதங்க வித்துவான்

**திரு. க. ப. சின்னராசா**

அவர்களுக்கு

இந்து கலாசார அமைச்சின்

'கலாபூஷணம'

விருது கிடைத்தமையிட்டு மகிழ்ச்சியடைவதுடன்
அவரது கலைப்பணி தொடர உளமார
வாழ்த்துகின்றோம்.

ஞானசம்பந்தர் கலைமன்றம்
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

(சி/4505)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### இசை வகுப்புகள்

வீணை, வயலின், புல்லாங்குழல் [W/E], வாய்ப்பாட்டு. (A/L, O/L, N. C; O. M. S]றெக்கோடா, யப்பான் மென்ரலின் இங்கிலிஸ் மென்ரலின் ஓர்கன், கிற்றார், மெலோடிக்கா வகுப்புகள் ஆரம்பம். வாசுகிரங்கன் 16/2 கச்சேரி, நல்லூர் வீதி. யாழ்ப்பாணம். (58240)

### உடன் விற்பனைக்கு

1½ மாதம் நிரம்பிய பொமனேரியன் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கு. சதானந்தன், 5/1, புகையிரத வீதி. நீராவியடி, யாழ்ப்பாணம். (58226)

சாவகச்சேரி புகையிரத நிலைய ஒழுங்கையில் கட்டடத்துடன் அமைந்துள்ள 3பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. பொ. ச. ஞானசீலன், புகையிரத நிலைய ஒழுங்கை, சாவகச்சேரி. (சி-4504)

பழைய இம்போட் சுருக்கு கதவு, மீன் தொட்டி, தொட்டில், 1. 5KV டைனமோ உடன் விற்பனைக்கு. 1010/6, K. K. S. வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (58228)

### விண்ணப்பப் படிவம்

கூட்டுறவுப் பரிசோதகர் பதவிக்கான அச்சிட்ட படிவம் விற்பனையாகின்றது. நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய். (58201)

### SPOKEN ENGLISH

இலக்கணம் இன்றி சுலபமாக ஆங்கில மூலம் ஆங்கிலப்பயிற்சி. ஆசிரியர் ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம், நாகலிங்க சுவாமிகள்வீதி, சங்கானை, நிகரை வயிரவர்கோயில் முன்பாக. (58204)

### வீடு விற்பனைககு

கொக்குவில் மேற்கு ஞான பண்டித வித்தியாசாலைக்கு முன்பாக உள்ள 2½பரப்பு வளவும், நாற்சார் கல்வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; செ. தம்பித்துரை, ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு. கொக்குவில். [58212]

### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள். மனிதர்களே இல்லாத வலிகாமத்தில் வாழ்ந்த கதை. ஒரு வித்தியாசமான நூல். 300 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை வீரகேசரியில் எழுதிய கட்டுரைகள். ரூபா 50. (58237)

# கைதடி - நுணாவில்பகுதியில் விவசாய சம்மேளனம் அமைக்க கோரிக்கை

வலி. தென்மேற்கு, ஓக. 10

கைதடி — நுணாவில் (ஜே – 309) பகுதியில் விவசாய சம்மேளனம் அமைக்கப்படாததால் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் பலவிதமான பாதிப்புக்களுக்கு உள்ளாவதாக கவலை தெரிவிக்கப்படுறது.

1996 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இடம் பெயர்ந்து மீளக் குடியேறிய இக் குடும்பங்களில் உள்ள அனேகமான விவசாயிகளின் வயல் நிலங்கள் பாதுகாப்புக் காரணங்களால் செய்கை பண்ண முடியாத நிலையில் உள்ளன.

கைதடி நுணாவில் பகுதி விவசாய நடவடிக்கைகளைக் கவனிக்க கைதடி கமநலசேவைகள் நிலையம் இருந்த போதிலும் இதுவரை விவசாய சம்மேளனம் அமைக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என விவசாயி ஒருவர் கவலையுடன் தெரிவித்தார்.

விவசாய சம்மேளனம் அமைக்கப்படாததால் விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய மானிய அடிப்படையிலான உதவிப் பொருள்களும் கிடைப்பதில்லை என்றும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை யாழ். மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான விவசாயிகளின் தேவைகளை விவசாய சம்மேளனங்களே நிறைவேற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

(ஐ – 185)

## மதகு திருத்தம்

சண்டிலிப்பாய், ஓக. 10

பண்டத்தரிப்பு - மாதகல் பிரதான வீதியிலுள்ள சேதமடைந்த பாரிய மதகு தற்போது துரித கதியில் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது. மதகுக்குக் பக்கத்தில் தற்காலிகமாக பாதை ஒன்று நிறுவப்பட்டு அதன் மூலம் போக்குவரத்து நடைபெற்று வருகின்றது. மாரி காலத்தில் மாதகல் பாணாவெட்டி குளத்திலிருந்து மேலதிகமான வெள்ளம் இந்த மதகு வழியாகவே மாதகல் சம்பில்துறை கடற்கரையைச் சென்றடைகின்றது.

(ஐ-135)

# வீதியில் வைத்து யுவதி தாக்கப்பட்டுக் காயம்!

## நெல்லியடியில் சம்பவம்

நெல்லியடி, ஓக. 10

பொலீஸ் நிலையத்திற்கு விசாரணைக்குச் சென்று திரும்பிய இளம் யுவதி ஒருவர், வீதியில் வைத்து அவரது உறவினரால் இரும்புக் கம்பிகொண்டு தாக்கப்பட்டார். மண்டை உடைந்த நிலையில் யுவதி மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத்தாக்குதல் சம்பவம் நேற்றுக்காலை 10 மணியளவில் நெல்லியடிப் பகுதியில் இடம் பெற்றது,

அல்வாய் கிழக்கைச்சேர்ந்த இராசரத்தினம் வளர்மதி (வயது 26) என்பவரே காயமடைந்தவராவார்.

இவரைத் தாக்கிய உறவினர் நெல்லியடி பொலீஸாரினால் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகின்றது.

(ஐ-109-173)

## பன்னாலை கிளை திறப்பு

சண்டிலிப்பாய், ஓக. 10

தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளை ஒன்று பன்னாலையில் திறக்கப்பட்டுள்ளது. பன்னாலைப் பகுதியில் மீளக்குடியேறியுள்ள மக்களின் நலன்கருதி பன்னாலை சேர். கனகசபை வித்தியாலயத்திற்கு சமீபமாக இக்கிளை அண்மையில் திறக்கப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் சி. சிவமகாராசா தெரிவித்தார்;

(ஐ-135)

# ஆடிவேல் பவனி இன்று ஆரம்பம்

கொழும்புத்துறை, ஓக. 10

நல்லூர் பாலகதிர்காம தேவஸ்தான ஆடிவேல் பவனி இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு தேவஸ்தானத்திலிருந்து ஆரம்பமாகி பருத்தித்துறை வீதிவழியாக வீரமாகாளிஅம்மன் ஆலயத்தையும். பின்னர் ஒரு மணிக்கு அங்கிருந்து ஆரம்பமாகி மாலை 5.30 மணிக்கு வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலையும் சென்றடையும்.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு வண்ணை சிவன்கோயிலிலிருந்துஆரம்பமாகும். ஆடிவேல்பவனி காங்கேசன்துறை வீதி வழியாக பகல் 12 மணிக்கு நாச்சிமார் அம்மன் ஆலயத்தைச் சென்றடைந்து அங்கிருந்து பிற்பகல் 3 மணிக்கு புறப்பட்டு மாலை 6 மணிக்கு கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தைச் சென்றடையும்;

நாளை மறுதினம் புதன் கிழமை காலை 9 மணிக்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்திலிருந்து வேல்பவனி ஆரம்பமாகி திருநெல்வேலி வழியாக அரசடி சிவகாம சுந்தரி அம்மன் ஆலயத்தை பகல் 12 மணிக்குச் சென்றடையும். அங்கிருந்து பிற்பகல் 3மணிக்கு புறப்பட்டு கல்வியங்காடு ஊடாக மாலை 5 மணிக்கு பாலகதிர்காமம் தேவஸ்தானத்தைச் சென்றடையவுள்ளது.

(ஐ-8-30)

# நயினை - நல்லூர் பாத யாத்திரை

திருநெல்வேலி, ஓக. 10

நல்லூர் கந்தன் இரதோற்சவத்தை முன்னிட்டு சப்த தீவக திவ்ய ஜீவன சங்க சமாஜம் வருடந்தோறும் நடத்தி வரும் நயினை — நல்லூர் பஜனை பாத யாத்திரையின் 34ஆவது ஆண்டு பஜனை பாத யாத்திரை வழமை போல இம்முறையும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் நடைபெறும் விசேட பூசையைத் தொடர்ந்து வேல் சகிதம் பாதயாத்திரை ஆரம்பமாகும். குறிகாட்டுவான், புங்குடுதீவு, வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, பண்ணை, கோட்டை, வில்லூன்றி, கந்தர்மடம் ஆகிய இடங்களுக்கு ஊடாக 20 ஆம் திகதி வியாழக்கிழமை காலை நல்லைக்கந்தன் ஆலயத்தை யாத்திரை சென்றடையும்.

அங்கு திவ்ய ஜீவன சங்கத் தலைவர் கி. கனகரத்தினம் தலைமையில் பஜனை நடைபெறும். பாத யாத்திரை செல்லும் வழியில் உள்ள அனைத்து இந்து ஆலயங்களையும் பாத யாத்திரை அடியார்கள் தரிசித்து செல்வார்கள்.

(ஐ-135)

# வெண்ணெய் பிரிக்கும் இயந்திரம் கிடைத்தது

சண்டிலிப்பாய், ஓக. 10

பாலிலிருந்து வெண்ணெய் பிரிக்கும் இயந்திரம் ஒன்று தெல்லிப்பழை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திற்கு கிடைத்துள்ளது.

வலிகாமம் – வடக்கு பிரதேச செயலரினால் பிரமாண அடிப்படையிலான மூலதன நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து பெறப்பட்ட இந்த இயந்திரம் மூலம் விரைவில் பாலிலிருந்து வெண்ணை தயாரிக்கும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளதாக சங்கத் தலைவர் சி. சிவமகாராசா தெரிவித்தார்.

(ஐ-135)

# வடமராட்சிப் பகுதியில் கட்டாக்காலிகளால் விவசாயம் பாதிப்பு

நெல்லியடி, ஓக. 10

வடமராட்சிப் பகுதியில் கட்டாக்காலி ஆடுமாடுகளின் தொல்லை அதிகரித்து வருவதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள்.

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிலும், வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவிலுமே இவ்விதம் பயிர்கள் அழிக்கப்படுகின்றன.

கால போக நெற்செய்கை அடுத்த மாதம் ஆரம்பமாவதனால் நெற்பயிர்களும் கால்நடைகளினால் நாசமாக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இரு பிரதேச செயலர் பிரிவுகளிலும், கால் நடைகளைப் பிடிக்கும் பணிக்குரியவர்களை நியமனம் செய்ய வேண்டுமென கரணவாய் கிழக்கு கமக்காரர் அமைப்பின் தலைவர் மு. கணபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

(ஐ-109-173)

# பக்திப் பாடல் ஒலிநாடாக்கள் பண்பாட்டுச்சிதைவை தடுக்கஉதவும்

## வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஓக. 10

சமுதாயம் நலிவுற்றிருக்கும் இன்றைய காலகட்டத்தில் எமது பண்பாட்டைச் சிதையச்செய்யும் காரணிகளில் ஒன்றாக கினிமாப் பாடல்கள் போன்ற கேட்கத்தகாத ஓசைகளும் அடங்குகின்றன. எனவே இத்தகைய சூழ்நிலையில் பக்தி ரசம் ததும்பும் ஒலி நாடாக்களை வெளியிடுவது எமது பண்பாட்டை சீரடையச் செய்வதில் முக்கிய பங்கு வகிக்கும்.

நல்லை ஆதீன மண்டபத்தில் அண்மையில் 'பக்திரசப் பாமலர்கள்' ஒலிப்பதிவு நாடாவை வெளியிட்டு வைத்து உரையாற்றிய சமுதாய மருத்துவத்துறை விரிவுரையாளர் வைத்திய கலாநிதி சுரேந்திரன் நச்சினார்க்கினியன் இவ்வாறு தெரிவித்தார்.

குணராஜா நக்கீரன்பாடிய இந்த இசைநாடாவை மகாவித்வான் பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர் இயற்றி இசையமைத்துள்ளார். யாழ். இந்துக்கல்லூரி அதிபர் அ. சிறிக்குமரன் தலைமையில் வெளியீட்டுவிழா நடைபெற்றது.

வைத்திய கலாநிதி சுரேந்திரன் நச்சினார்க்கினியன் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

ஆற்றல் மிக்கவர்கள் சிறியவர்களாயினும் மேடையில் அமர்த்தி அவர்களுடன் சமமாக இருந்து கௌரவிப்பது பெரியோர்களின் கடமை. ஆனால் இன்று பெரியவர்கள் சிறியவர்களைக் கருத் [illegible] இதனால் வழிகாட்டலும் தடைப்படுகின்றது.

இளைஞர் மத்தியில் ஆன்மீக உணர்வு குறைந்து வருகிறது. என்ற கருத்து பரவலாக உள்ளது. இதற்குக் காரணம் பெற்றோர், ஆசிரியர்கள், சமயக்குருமார்கள் போன்றவர்களே. ஆசிரியர்கள் கற்பித்தலின் போது மெய்ஞ்ஞானத்தை விஞ்ஞானத்துடன் தொடர்புபடுத்திக்கற்பிப்பது அவசியமாகும். சமயக் குருமார்களைப் பொறுத்தவரை ஆலயங்களில் செய்யும் கிரியைகள் அனைத்துக்கும் விளக்கமளிக்கக்கூடிய புலமையுடையவராக இருத்தல் வேண்டும்— என்றார்.

'நல்லூர்க்கந்தன் பக்திரசப் பாமலர்கள்' ஒலிப்பதிவு நாடாவின்மதிப்பீட்டுரையை ஆசிரியர் ஆறு. திருமுருகன் நிகழ்த்தினார்.

(ஐ-8)

# கட்டடங்கள் புனரமைப்பு

சண்டிலிப்பாய், ஓக. 10

திருகோணமலையிருந்து கப்பல் மூலம் திரும்பிவரவுள்ள இடம்பெயர்ந்த மக்களை தற்காலிகமாகத் தங்க வைப்பதற்கு தெல்லிப்பழை காசிப்பிள்ளையார் கோயிலுக்கு சமீபமாகவுள்ள நான்கு சுட்டடங்கள் தற்போது புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன.

வடமாகாண மீளக்குடியேற்ற புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபையினால் இதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் இதன் ஒப்பந்த வேலையை பொறுப்பேற்று மேற்படி கட்டடங்களைப் புனரமைப்பு செய்து வருகின்றது.

(ஐ-135)

# நாய்களுக்கு தடுப்பூசி

செம்பியன்பற்று ஓக. 10

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு நாய்களுக்கு ஏற்படும் விசர் நோய்த் தடுப்பூசி மருந்து வந்துள்ளது.

பின்வரும் திகதிகளில் பின்வரும் இடங்களில் வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றப்படும் என்றும்—

அந்தந்தப்பகுதி மக்கள் தமது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ளலாமெனவும் சுகாதார வைத்திய அதிகாரிபணிமனையினர் அறிவித்துள்ளனர்.

★ஓகஸ்ட் 11 — பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி காரியாலயம்.

★ ஓகஸ்ட் 12 காலை— கற்கோவளம் சனசமூக நிலையம்

மாலை வராத்துப்பளை சனசமூக நிலையம்

★ஓகஸ்ட்14- காலை— உபய கதிர்காமம் சனசமூக நிலையம்

மாலை— முருகையன் கோவிலடி சனசமூக நிலையம்.

(ஐ-36)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 2 மாதங்களுக்குரிய நிவாரணத்தை ஒருமித்து வழங்குவதற்கு முடிவு

யாழ்ப்பாணம், ஓக. 10

இரு மாதங்களுக்கு உரிய உணவு முத்திரைக்கான உணவுப் பொருள்களை ஒருமித்து வழங்குவதென நேற்று முன்தினம் யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஜூலை, ஓகஸ்ட் மாதங்களுக்குரிய நிவாரணப் பொருள்களே ஒருமித்து வழங்கப்படவுள்ளன.

ஜூலை முதலாம் திகதியில் இருந்து 55 ஆயிரத்து 556 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உணவு முத்திரை நிவாரணம் 86 ஆயிரத்து 205 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. இக் குடும்பங்களில் 30 ஆயிரத்து 649 குடும்பங்களுக்குத் தற்போது நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளது.

நிவாரணம் தொடர்பாக நேற்று முன்தினம் யாழ். செயலகத்தில் பிரதேசசெயலர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் ஆராயப்பட்டது.

சகல பிரதேச செயலர் மட்டத்திலும் 36 சத வீதம் உணவு முத்திரை நிறுத்தப்படும் திட்டம் குறித்து ஆராயப்பட்டபோது இதற்கு பல பிரதேச செயலர்கள் தமது ஆட்சேபனையைத் தெரிவித்தனர்.

தற்பொழுது குறைந்தளவு உணவு முத்திரைகளே யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் எதிர்வரும் 12 ஆம் திகதி உணவு முத்திரைகள் யாழ். செயலகத்தில் இருந்து அனுப்பி வைக்கப்படும் என்றும் இக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

(இ-5)

## பாலங்கள் திருத்தப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஓக. 10

விமானக்குண்டு வீச்சினால் சேதமடைந்த பொன்னாலைச் சந்தி வறுத்தலைச் சந்தி தாம்போதி திருத்தப்பட்டு சேதமடைந்த பாலங்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை தொண்டமானாறு பாலம், புத்தூர் சந்திக்கும் மீசாலை சந்திக்கும் இடையிலான வண்ணாத்திப் பாலம், வழுக்கையாறு பாலம் போன்றவற்றின் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கோப்பாய் - கைதடி பாலமும் திருத்தப்பட்டுள்ளது.

(இ-5)

## 60 வீத சம்பள அதிகரிப்பு பஸ் ஊழியருக்கு இல்லை

தென்மராட்சி, ஓக. 10

வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட சம்பள உயர்வின் 1998 ஆம் ஆண்டுக்குரிய 60 வீத சம்பள அதிகரிப்பு இன்னமும் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் சபை ஊழியர்களுக்கு வழங்கப்படவேண்டிய கடந்த கால 25 வீத 12 அரை வீத ஊக்குவிப்பு கொடுப்பனவுகளும் இதுவரை வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

## குடும்பத் தலைவர்களை இழந்த 570 பெண்கள்

யாழ்ப்பாணம், ஓக. 10

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் 570 பெண்கள் தமது குடும்பத் தலைவர்களை இழந்துள்ளனர் என்று அண்மையில் எடுக்கப்பட்ட புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இப்பிரதேச செயலர் பிரிவிலுள்ள 24 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளிலும் தற்பொழுது 4 ஆயிரத்து 227 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 771 பேர் வசிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(இ-5)

## சின்னக்கடை மீன் சந்தை; இடநெருக்கடி அதிகரிப்பு

குருநகர், ஓக. 9

குருநகர் சின்னக்கடைப் பொதுச்சந்தையில் மீன் விற்பனை செய்யும் பகுதியில் பெருமளவு இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இங்கு அதிகளவில் வியாபாரிகள் மீன் விற்பனை செய்து வருகிறார்கள். மீன் வாங்க வரும் பொதுமக்கள் மிகவும் குறுகிய பாதையூடாகவே சென்று நாளாந்தம் மீனை வாங்குகிறார்கள்.

மேலும் பொதுமக்கள் மீன் வாங்குவதற்காக சந்தையினுள் செல்வதற்குள்ள கிழக்குப் புற வாசலில் வைத்தே மீன் கொட்டப்பட்டு ஏலம் கூறப்படுகின்றது. இதனால் இவ்வாசல் ஊடாக மீன் சந்தையினுள் பிரவேசிப்பதோ வெளியேறுவதோ மிகவும் சிரமமாக உள்ளது.

(இ-51)

## 'பாஸ்' வழங்குவதில் கட்டுப்பாடு தளர்வு

கொழும்பு, ஓக 10

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் இருந்து வவுனியா வருபவர்களுக்கான பாஸ் வழங்கும் நடைமுறையில் சில விதிமுறைகள் தளர்த்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதியில் இருந்து வவுனியா வருபவர்களுக்கு முதலில் ஒருநாள் பாஸும் பின்னர் ஐந்துநாள்பாஸுமே வழங்கப்பட்டு வந்தன.

ஆனால் தற்போது இந்த நடைமுறை மாற்றி அமைக்கப்பட்டுள்ளதாக வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் மற்றும் குடிசன கட்டுப்பாட்டு சிரேஷ்டபொலீஸ்அத்தியட்சகர் லக்ஷ்மன் சிறிவர்தன ஆகியோர் நேற்று முன்தினம் விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படிவவுனியாவருபவர்கள் தாம் வரும்போது தமது பகுதி பிரதேச செயலரிடம் இருந்து உறுதிப் படுத்தல் சிபார்சுக் கடிதம் ஒன்றைப் பெற்று வரவேண்டும். அத்துடன் வவுனியாவில் நிரந்தரமாக வசிப்பவர் ஒருவரிடம் பிணையையும் அவர் பெற்றுக் கொண்டால் அதிக நாள் பாஸ் வழங்கப்படும்.

வவுனியா வந்திருந்து நாட்டின் ஏனைய பகுதிகளுக்குச் செல்பவர்களுக்கு இந்த நடைமுறை [illegible]த்தும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-9-164)

## ஆளுநரின் செயலர் யாழ். வருகை

யாழ்ப்பாணம், ஓக. 10

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எஸ். கணேசநாதன் யாழ்ப்பாணத்திற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். செயலகத்தில் அரச திணைக்கள தலைவர்களுடனான கலந்துரையாடல் ஒன்றை அவர் நடத்தினார்.

மாகாண சபையின் கீழ் செயற்படும் திணைக்களங்களின் அபிவிருத்திகள் மற்றும் முன்னேற்றங்கள் குறித்தும் அவர் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடவுள்ளார்.

(இ-5)

## மனனப் போட்டி

யாழ்ப்பாணம், ஓக. 10

சங்கானைப் பிரதேசசபை உப அலுவலகப் பொறுப்பதிகாரி து. கிருபானந்தன் தலைமையிலான மனனப் போட்டியும், கலை நிகழ்ச்சிகளும் எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9. 30 மணிக்குச் சங்கானை சவேரியார் பாலர் பாடசாலையில் நடைபெறவுள்ளன.

இந் நிகழ்வில் வலி.மேற்கு பிரதேச சபைத்தலைவர் த. திரிலோகநாதன் வலி.மேற்கு பிரதேச சபை உப தலைவர் வே.மகேந்திரன், வலி.தென் மேற்குப் பிரதேச சபைத் தலைவர் வெ.அன்ரன்ஜோன்சன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும், சங்கானை அ.மி.த.க. பாடசாலை அதிபர் நா. செல்லையா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

(ஐ-8)

## கலந்துரையாடல்

வலி. தென் மேற்கு, ஓக. 10

மினி ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ளவுள்ள யாழ். பல்கலைக்கழக வீரர்களுக்கான கலந்துரையாடல் நாளை காலை 9-30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

(ஐ-185)

## விவசாய போதனாசிரியருக்கு பயிற்சி

வடமராட்சி, ஓக. 10

விவசாயத்திணைக்களத்தின் உதவியுடன் சர்வதேச 'கெயர்' நிறுவனம் விவசாயப் போதனாசிரியர்களுக்கென பத்து நாள் பயிற்சி வகுப்பினை நடத்தவுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள சர்வதேச 'கெயர்' நிறுவனத்தில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை இப்பயிற்சி வகுப்பு நடைபெறும்.

யாழ். மாவட்டத்திலுள்ள கமநலசேவை நிலையங்களில் பணியாற்றும் [illegible] போதனாசிரியர்கள் பயிற்சி வகுப்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

(ஐ-173-15)

## இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகள் யாழ். வருவர்

இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த மூன்று சுவாமிகள் அடுத்த (செப்ரம்பர்) மாதம் முதல் வாரத்தில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கின்றனர்.

இராமகிருஷ்ண மிஷனின் இலங்கைக் கிளையின் உப தலைவர் தவத்திரு. சுவாமி ஆத்மகணானந்தர் மகராஜ், சென்னை செங்கல்பட்டு இராமகிருஷ்ண மிஷன் செயலாளர் தவத்திரு. சுவாமிவிருபாக்ஷனந்தா மகராஜ், மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்தா ஜீ. மகராஜ் ஆகிய மூவருமே யாழ்ப்பாணம் வருபவர்களாவர்.

ஒரு வாரகாலம் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் இவர்கள் பருத்தித்துறை இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவி ஆலய கும்பாபிஷேகத்தில் கலந்து கொள்வதோடு யாழ்ப்பாணம், கொக்குவில், திருநெல்வேலி, சாவகச்சேரி ஆகிய இடங்களில் நடைபெறும் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டு சொற்பொழி வாற்றுவர்.

இவர்களின் யாழ். விஜயத்துக்கான ஏற்பாடுகளை பருத்தித்துறை இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் மேற்கொண்டுள்ளது.

(ஐ-173)

# செய்திக் கொத்து

### பழனிவேல் பவனி

சாவகச்சேரி, ஓக. 10

சாவகச்சேரியில் ஸ்ரீ பழனியாண்டவர் ஆலயத்தின் 7 ஆவது பழனிவேல் பவனிவிழா கடந்த வெள்ளிக்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. டச்சுவீதியில் உள்ள ஆலயத்தில் நடைபெற்ற விசேட அபிசேக ஆராதனைகளைத் தொடர்ந்து ஆசியுரைகள் இடம்பெற்று முடிந்ததும் பிற்பகல் பழனிவேல் பவனி ஆரம்பமானது. ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ கி.கிருஸ்ணமூர்த்திக் குருக்கள் தலைமையில் பவனி நடைபெற்றது. (ஐ-31)

### கணனி மூலம் ஒய்வூதிய வவுச்சர்கள்

தென்மராட்சி, ஓக. 10

தென்மராட்சி பிரதேச ஒய்வூதியக் கிளையில் ஒய்வூதியம் பெறுபவர்களுக்கு கணனியில் தயாரிக்கப்பட்ட ஒய்வூதிய வவுச்சர்கள் இம் மாதம் (ஆகஸ்ட்) முதல் வழங்கப்படவுள்ளன.

கணனியில் தயாரிக்கப்பட்ட ஒய்வூதிய வவுச்சர்கள் சாவகச்சேரி, கைதடி, கொடிகாமம் ஆகிய கிராமிய வங்கிகள் தவிர்ந்த ஏனைய வங்கிகளில் ஓய்வூதியம் பெறுபவர்களின் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலக கணக்காளர் சி. குகதாஸ் தெரிவித்தார்.

(ஐ-117)

### சந்தையில் பனாட்டு

தென்மராட்சி, ஓக. 10

சாவகச்சேரி சந்தைக்கு பனாட்டுத் தட்டுகள் விற்பனைக்கு வரத் தொடங்கியுள்ளன.

ஒரு சோடி பனாட்டுத் தட்டுகள் ரூபா ஆறு வரை விற்பனை செய்யப்படுகின்றது.

(ஐ-117)

### பாலர் பாடசாலை

யாழ்ப்பாணம், ஓக. 10

உடுப்பிட்டி நாவலர் சனசமூக நிலையத்தினர் புதிதாககாணிஒன்றைக்கொள்வனவு செய்து பாலர்பாடசாலையொன்றை அமைத்துள்ளனர்.

3லட்சம் ரூபா பெறுமதியான வேலைகளுக்கு யுனிசெவ் நிறுவனம் 75ஆயிரம் ரூபாவும், பிரதேச செயலகத்தினர் உபகரணமும், பொதுமக்கள் பணமும் வழங்கியுள்ளனர்.

மிகுதி வேலைகள் பொது மக்களினால் சிரமதானப்பணி மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

(ஐ-8)

### கட்டடம் திருத்தம்

நீர்வேலி, ஓக. 10

வலி. கிழக்கு விவசாய விஸ்தரிப்பு நிலையத்தின் நீர்வேலி வடக்கிலுள்ள உரக்களஞ்சியம் அண்மைக்கால அசம்பாவிதங்களின் போது சேதமடைந்துள்ளது. அதனைத் திருத்தியமைக்கும் முயற்சிகளை நீர்வேலி வடக்கு விவசாய சம்மேளனம் மேற்கொண்டு வருகின்றது.

(ஐ-110)

### கால்நடை தொடர்பான ஆலோசனை

தென்மராட்சி, ஓக. 10

பளைப் பிரதேசத்தில் கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்கும் பொருட்டு சாவகச்சேரி கால்நடை அபிவிருத்தித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் பிரதி வியாழக்கிழமை தோறும் காலை 9.00 மணி முதல்பகல்10.00 மணிவரை பளை கமநல சேவைகள் நிலையத்தில் உரிய ஆலோசனைகளை வழங்கவுள்ளனர்.

இப் பிரதேசத்தில் கால்நடைகள் வளர்ப்போர் தமக்கு ஏற்படும் பிரச்சினைகளை இந்த உத்தியோகத்தர்களுக்கு தெரிவித்து ஆலோசனைகளைப்பெற்றுக் கொள்ளுமாறு சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அறிவித்துள்ளார்.

(ஐ-117)

### வாய்க்கால் திருத்தம்

நீர்வேலி, ஓக. 10

நீர்வேலி மத்தியில் அமைந்துள்ள கேராலி வத்தை வெள்ள வாய்க்கால் திருத்த வேலைகள் நடைபெறவுள்ளன. இதற்கான முயற்சிகளை நீர்வேலி வடக்கு விவசாயிகள் சம்மேளனம் மேற்கொண்டு வருகின்றது.

(ஐ-110)

### விற்பனை நிலையம்

நெல்லியடி, ஓக் 10

செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த உற்சவத்தின் போது அங்கு புதிய விற்பனை நிலையமொன்றைத் திறந்து வைக்க உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

(ஐ-109)

### பாராட்டு

நீர்வேலி தெற்கு கிராம அலுவலர் சு. சண்முகவடிவேலுவின் சேவைகளைப் பாராட்டி நீர்வேலி ஸ்ரீ முருகன் மாதர் கூட்டுறவுச் சங்கத்தினர் அண்மையில் பாராட்டுவிழா ஒன்றினை நடத்தினர்.

(ஐ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு,

## சிவசுப்பிரமணியம் சிவரட்ணம் வாழி!

சுன்னாகத்தால் சிலரடைவர் பெருமையாம்
சுன்னாகமே சிலராலே பெருமையுறும்
இன்னாரால் இன்னதுதான் நடக்குமெனின்
பொன்னாருடை மேனியன்தன் திருவருள்தான்.

அருங்கலைசேர் நிறைமரபிலுதித் தாசானாம்
கரும்பெனுநற் சிவசுப்பிர மணியம் புகழ்
தரும் புதல்வன் சிவரட்ணம் பேரெடுத்தாய்
விரும்பிநீர் பலசபையில் உழைத்தீரே.

வந்ததுதான் பெரும்பதவி நீதி கூற
தந்ததரசு சமாதான அதிபதியாய்
நொந்து வாழ்ந்திடு மக்களுக்கு உம்சேவை
தந்து நின்று பெருமைபெற வாழ்த்தினனே.

அதிபர்
மயிலணி சைவ மகா வித்தியாலயம்

(58198)


# ஆசிரியர்களுக்கு ஆபத்து அலவன்ஸ் வழங்க மாகாணசபையில் நிதி இல்லை

மட்டக்களப்பு, ஒக. 10

வடக்கு—கிழக்கு மாகாண பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஆபத்து அலவன்ஸ் வழங்க மாகாண கல்வி அமைச்சில் நிதி இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசநிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் ஆபத்து அலவன்ஸாக சம்பளத்தில் $12\frac{1}{2}$ சதவீதம் அரச ஊழியர்களுக்கு அலவன்ஸ் வழங்கப்படுகின்றது.

வடக்கு—கிழக்கு மாகாண பாடசாலை ஆசிரியர்களுக்கு 1997 ஜனவரி முதல் நிலுவையுடன் இந்த அலவன்ஸை வழங்க 14கோடி 34 இலட்சம் ரூபா நிதி தேவை என மாகாண கல்வி அமைச்சு மதிப்பீடு செய்துள்ளது.

மாகாண கல்வி அமைச்சில் இதற்கான நிதிவளம் இல்லை. இதனால் மத்திய அரசிடமிருந்தே நிதி கோரப்பட்டுள்ளது.

மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்யுமானால் 24 ஆயிரம் ஆசிரியர்களுக்கும் தாமதம் இன்றி ஆபத்து அலவன்ஸ் வழங்கப்படும் என மாகாண கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(இ-21)

## நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஒக. 10

நல்லூர் உற்சவ காலத்தையொட்டி இளங்கலைஞர் மன்றம் மாலை 5 – 30 மணி முதல் 7 மணிவரை துர்க்காமணி மண்டபத்தில் ஒழுங்கு செய்துள்ள தெய்வீக இசையரங்கில் இன்று திங்கட்கிழமை வீ. கே. நடராஜாவின் இசைக்கச்சேரி நடைபெறவுள்ளது.

துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் திருமுறை ஓதலுடன் நிகழ்ச்சி ஆரம்பமாகும். (ஐ-8-30)

★ ★ ★

நல்லூர் உற்சவ காலத்தையொட்டி நல்லூர் சைவமகாசபை முத்துவிநாயகர் ஆலயத்தில் மாலை 5-15மணிக்கு பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மாவின் ''கம்பராமாயணம்'' தொடர் இசைச் சொற்பொழிவை ஒழுங்கு செய்துள்ளது.

இந்நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியது. எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்து நடைபெறவுள்ளது. (ஐ-8-30)

## தொலைபேசி இலக்கம் மாற்றம்

நெல்லியடி, ஒக. 10

வடமராட்சிப் பகுதியில் உள்ளூர் தொலைபேசி தொடர்பு இலக்கத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

தொலைபேசி அழைப்புக்கான ஆரம்ப இலக்கம் முன்பு 22 ஆகஇருந்தது. தற்பொழுது அது 32 என மாற்றப்பட்டிருப்பதாக மந்திகையிலுள்ள ரெலிகொம் பரிவர்த்தன நிலைய அதிகாரி தெரிவித்தார். (ஐ-109)

## ஆயுதங்கள் மீட்பு

வவுனியா, ஒக. 10

வவுனியா - வேப்பங்குளம் குழுமாட்டுச் சந்திப் பகுதி கடந்தவெள்ளியன்று படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

றிவோல்வர், கிரனேட் உட்பட பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் — கொழும்பில் கைது செய்யப்பட்ட சிலர் வழங்கிய தகவல்களை அடுத்தே இந்த சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தப்பட்டதாகவும்— வவுனியாவில் படையினர் அறிவித்துள்ளனர்.

(இ-9-164)

## வெளி இணைப்பு இயந்திரங்கள்

குருநகர், ஒக. 10

வன்னியில் இருந்து குடாக்கடல் ஊடாக குருநகருக்கு வந்த அகதிகளால் எடுத்து வரப்பட்ட வெளியிணைப்பு இயந்திரங்கள் குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கப் பணிமனையில் உள்ளன.

அவற்றின் உரிமையாளர்கள் இப் பணிமனைக்கு இன்று திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு வருகை தந்து அடையாளத்தை உறுதிப்படுத்தி அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்று குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம் அறிவித்துள்ளது. (ஐ-51)


உ

வட்டுக்கோட்டை அராலி மேற்கு
நொச்சியம்பதி கோட்டைக்காடு

## ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மஹோற்சவப் பெருவிழா

கொடியேற்றம் - 12 - 08 - 98 புதன் பகல் 11 மணி

தேர்த்திருவிழா - 20 - 08 - 98 வியாழன் காலை 9-30 மணி

தீர்த்தத்திருவிழா - 21 - 08 - 98 வெள்ளி பகல் 11 மணி

மஹோற்சவ பிரதம குரு, ''சிவாகமவித்பத் ஜோதி'' பண்டிதர்
ஜெயஸ்ரீ. கு. ஜெகதீஸ்வரன் குருக்கள்
(புன்னாலைக் கட்டுவன்)

அவர்கள் தலைமையில் நடைபெறும்.
அனைவரும் தரிசித்து அருள் பெறுமாறு வேண்டுகின்றோம்.

– ஆலய பரிபாலனசபை

(58211)



## கண்ணீர் அஞ்சலி

### ஐயப்பன் சங்கரன்

(உரிமையாளர்-சுபாஸ்கபே, சுபாஸ்டூரிஸ்ட் ஹோட்டேல்)

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

S. ராமையா செட்டியார்
குடும்பத்தினர்,
S. ராமையா செட்டியார் அன் சன்ஸ்.

172, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(58235)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | உதிர்வு |
|---|---|
| 01 | 22 |
| 08 | 07 |
| 1920 | 1997 |

உடுவில் டச்சு வீதியைச் சேர்ந்த

### அமரர் நா. சின்னத்தம்பி

(கட்டடக் கலைஞரும், ஒப்பந்தகாரரும்)

அன்புருவாய் எம்முடனே கலந்திருந்து
அணையாத ஒளிவிளக்காய் ஒளி வீசி
பாசமுடன் எமையிங்கு வளர்த்தெடுத்து
பண்புடனே எமக்கெல்லாம் வழிகாட்டி
இடையினிலே பிரிவுத்துயர் தந்துவிட்டு
எட்டவே சென்றுவிட்டீர் எங்கள் ஐயா!
விழித்திரையில் இருந்து நீங்கினாலும்
எங்கள் மனத்திரையில் என்றும் வாழ்ந்திடுவீர்!

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை
இருகரம் கூப்பி நிற்கின்றோம்!.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

டச்சு வீதி,
உடுவில்.

(58224)



## 13 ஆம் ஆண்டு நினைவலைகள்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 10 | 10 |
| 02 | 08 |
| 1956 | 1985 |

திருமதி

### கமலாதேவி சுப்பிரமணியம்

(ஆசிரியை, றோ. க. த. பாடசாலை, கோப்பாய்தெற்கு)

ஒவ்வொரு கணமும் உங்கள் நினைவுமாய்
பதின்மூன்று ஆண்டுகள் உருண்டதம்மா
எங்களின் துயரம் ஆற்றிடவழியில்லை
இதயம் உருகிட அஞ்சலி செய்தோம்.

பிரிவால் துயருறும்
மகன் சுதர்ஸன்,
கணவன் சுப்பிரமணியம்.

கிறிஸ்தவகல்லூரி முன்பாக,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

(58222)



உ

## ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானம் ஆடிவேல் விழா

10 – 8 – 98 முதல் 11, 12 ஆகிய மூன்று தினங்கள் பக்தி பூர்வமாகக் கொண்டாடப்படும்.

10-8-98 திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு இந்த ஊர்வலம் ஆரம்பமாகி பருத்தித்துறை வீதிவழியாக நண்பகல் 11.00 மணிக்கு வீரமாகாளி அம்மன் ஆலயத்தைச் சென்றடையும். அங்கிருந்து 1.00 மணிக்கு ஆரம்பமாகி யாழ். நகர் அனைத்து வீதியூடாக மாலை 5.30 மணிக்கு வண்ணைச் சிவன் கோயிலைச்சென்றடையும்.

- தேவஸ்தானம்

விளம்பர அன்பளிப்பு; சித்ராலயா ஸ்ருடியோ 172, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(58087)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பெரும் பொறுப்பு

பாடசாலை செல்லும் வயதில் உள்ள இருபதாயிரம் சிறுவர்கள் வறுமை காரணமாக கல்வி அறிவு பெறாமல் உள்ளனர். இவர்கள் தமது குடும்பத்தின் வருமானம் கருதி சிறு சிறு தொழில்களைச் செய்கிறார்கள்.

யாழ். செயலகத்தின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கும் இந்தத் தகவல் மிகவும் கவலைக்குரியதாகும். போரின் பாரிய பின்விளைவுகளில் ஒன்று இது. குடா நாட்டில் எழுத்தறிவு இல்லாத வருங்கால சந்ததி ஒன்றை உருவாக்கப் போகிறது!

போர், அதன் பெறுபேறான இடம்பெயர்வு ஆகிய இரண்டினாலும் தமது தந்தையர்களை இழந்த சிறுவர்களே பெரும் எண்ணிக்கையில் இந்தத் துரதிர்ஷ்ட நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பெரும்பாலும் தந்தையரை இழந்த குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்கள் படிப்பை எட்டியும் பார்க்காமல், தமக்கு இயன்றளவில் விறகு சுமந்துவிற்றல், கடைகளில், வீடுகளில் பணியாள் வேலை செய்தல், கூலி வேலை செய்தல் போன்ற சிறு தொழில்களை நாடுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

கல்வி இலவசமாகவே போதிக்கப்பட்ட போதிலும்நூல்கள், உடுபுடைவைகள் மற்றும் கல்வி உபகரணங்களை வாங்குவதற்கு கணிசமான பணம் தேவைப்படுகிறது.

அது இல்லாதநிலையில், பட்டினியைப் போக்கப் போதிய பணம் இல்லாத நிலையில், குடும்பத்தைப் பராமரிக்க வருமானம் தேட வேண்டிய நிலையில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்கள், பாடசாலை செல்வதில் எவ்வாறு நாட்டம் கொள்ள முடியும்?

இந்த வகைச் சிறுவர்களுக்குக் கட்டாயக் கல்வி போதனை சாத்தியமாகாது. அவர்களின் குடும்பங்களுக்கு விசேட சமூக நலத் திட்டங்கள் மூலம் உதவி செய்யப்பட்டால் அன்றி அவர்கள் வருமானம் தேடும் முயற்சியைக் கைவிட்டுப் பாடசாலை சென்று கல்வி பெற முனைய மாட்டார்கள்.

எழுத்தறிவற்ற வருங்கால சந்ததிஒன்று உருவாகாது தடுக்க அரசாங்கமே அவர்களுக்கு உதவவேண்டும். போரைத் தொடரும் அரசாங்கத்திற்கு இது தட்டிக்கழிக்கமுடியாத கடமையும் பொறுப்புமாகும்.

ஆயினும் இந்த துர்ப்பாக்கியசாலிகளான சிறுவர்களுக்கு உதவுவதற்கென விசேட சமூக நலத்திட்டங்களை அரசு வகுக்கும்என்று எதிர்பார்க்க முடியாது. இடம்பெயர்ந்தோருக்கு வழங்கிய நிவாரணத்தையே, நிதிபற்றாக்குறை உண்டென்று கூறி குறைத்துள்ள அரசு, குடாநாட்டுச் சிறுவர் குறித்துக் கவனம் எடுக்கும் என்று நம்ப முடியாது.

யாழ்ப்பாணச் சமூகமே இது விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். திட்டமிட்டுச் செயலாற்றி சம்பந்தப்பட்ட சிறுவர்களை ஆபத்திலிருந்து காப்பாற்ற வேண்டும். இல்லையேல் யாழ்ப்பாண மக்கள் கல்வியறிவு உள்ள சமூகம்என்ற பெருமையைத் தொடர்ந்து நிலைநாட்ட முடியாது.

# மக்கள் அபிலாசைகளுக்கு ஏற்ற அபிவிருத்திப் பணிகள் வேண்டும்

## பிரதேச சபை தொடக்க விழாவில் பேச்சு

நெடுந்தீவு, ஒக. 10

மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் வகையில் அபிவிருத்திப் பணிகளைச் செய்ய வேண்டும். கிராமத்தின் வளர்ச்சிப் பணிகளில் நம்மை முற்றாக ஈடுபடுத்திக் கொள்ளப் பிரதேசசபை உறுப்பினர்கள் முன்வர வேண்டும்.

நெடுந்தீவு பிரதேசசபை தொடக்கவிழாவில் பேசிய யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன் இவ்வாறு தெரிவித்தார்.

நெடுந்தீவு பிரதேசசபையின் தொடக்கவிழா கடந்த மாத இறுதியில் றோ. க. மகளிர் வித்தியாலயத்தில் புலவர் அ. வெ. அரியநாயகம் தலைமையில் நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவதாசன் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது—

பிரதேச அபிவிருத்திக்கென நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு ரூபா 25 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுவந்தது. இது தற்சமயம் ரூபா 40 லட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

எமது கட்சியைப் பொறுத்தவரை வெறும் வார்த்தைகளில் நம்பிக்கை கொண்டவர்கள் அல்ல; மக்களது வாழ்க்கை நிலைகளை உயர்த்த வேண்டும் என்பதே எமது கட்சியின் முழுமையான நிலைப்பாடு.

90 ஆம் ஆண்டளவில் நாம் இங்கு வந்தபோது நீங்கள் எம்மீதுகாட்டிய அன்பை நாம் மறக்கவில்லை. நாங்கள் 8 வருடம் உங்களுடன் உறவாடி உங்கள் மனதில் இடம்பிடித்துள்ளோம். ஒவ்வொரு வருடமும் எமது தலைவர் நெடுந்தீவின் அபிவிருத்திக்கென நிதி ஒதுக்கீடு செய்துவருகிறார்.

இந்த விழாவில் இன்று சமுகமளித்திருக்க வேண்டியவர் எமது செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்களே. இந் நிகழ்ச்சியில் அவர் கலந்து கொள்ளாதது துரதிர்ஷ்டவசமாக ஏற்பட்ட நிகழ்வு.

இந்தக் கொடிய யுத்தம் நிறுத்தப்பட்டு தமிழர்கள் கௌரவமாக வாழும் நிலை ஏற்பட வேண்டும். இதற்குத் தெளிவான, நிரந்தரமான அரசியல் தீர்வு தேவை. வடக்கு — கிழக்கு என்றும் பிரிக்க முடியாத ஓர் அலகாக இருக்க வேண்டும். இந்த விடயங்களுடன் நிவாரண வெட்டு தொடர்பாகவும் நாம் ஜனாதிபதியுடன் தொடர்புகொண்டுள்ளோம். இதற்காக நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கவும் யோசித்திருந்தோம். ஆனால் பிற்பாடு ஏற்பட்ட சம்பவங்களினால் இது குறித்து முடிவெடுக்க முடியாமல் போய்விட்டது — என்றார்.

புலவர் ஏ. டபிள்யூ. அரியநாயகம் தமது தலைமையுரையில் கூறியதாவது —

இரண்டு தசாப்தங்களின் பின் இன்று மீண்டும் பிரதேசசபை மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டு இயங்கவுள்ளது. பிரதேச சபையின் ஊடாக இந்தக் கிராமத்தின் அபிவிருத்திக்காக எந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமோ அதைக் கருத்து முரண்பாடுகள் இன்றி மேற்கொள்வதே எமது குறிக்கோள். சபையின் செயற்பாடுகள் கிராமத்தின் அபிவிருத்தி என்பனவற்றுக்கு பெருந் தொகையில் நிதி தேவைப்படுகிறது. வருமானம் பெறுவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது — என்றார்.

நெடுந்தீவு உதவிஅரசாங்க அதிபர் நா. இராமச்சந்திரன் பேசும் போது கூறியதாவது—

அரசின் பன்முகப்படுத்தப்பட்ட பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீடுகள் மட்டுமன்றி அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியும் கிடைப்பதால் அவற்றை நல்லமுறையில் பயன்படுத்த வேண்டும். நெடுந்தீவு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளின் முக்கியத்துவத்தை பிரதேசசபை உறுப்பினர்கள் தெரிந்து கொண்டு உரிய தீர்வு காண்பதில் நடவடிக்கைகள் மேற்கொள்ளல் அவசியம்.

இன்று முன்மொழியப்பட்ட தீர்மானங்கள் மிகவும் முக்கியமானவை. பிரதேச சபை வருமானத்தை அதிகரிக்க உள்ளூர் பொருள்களுக்கு கணிசமான வரி அறவிடுவது பற்றி ஆலோசிக்கவுள்ளது. விரைவில் இது அமுல் நடத்தப்பட வேண்டும் — என்றார்.

ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் என். மனோகரன் உரையாற்றுகையில்—

எமது தலைவருக்கு ஏற்பட்ட நிகழ்வு எம்மைப் பாதித்த போதும் மக்களுக்குத் தேவையானதைச் செய்ய வேண்டும் என்ற அவரது குறிக்கோளை செயற்படுத்த வேண்டும் என்பதற்காக நிகழும் இன்றைய வைபவம் பலதரப்பட்ட வழிகளிலும் மோசமாகப் பாதிக்கப்பட்ட இத் தீவகத்தின் வளர்ச்சிக்குப் பயனுள்ளதாக அமையும். நெடுந்தீவை வளப்படுத்த வேண்டும் என்ற தலைவரின் கருத்தை நிறைவேற்ற கட்சி சகல முயற்சிகளையும் செய்யும்— என்றார்.

நெடுந்தீவு கல்விப் பணிப்பாளர் எஸ். தில்லைநாதன், உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ரி. வ. கிருஷ்ணசாமி, ஜீ. ரி. சற் நிறுவனத்தைச் சேர்ந்த எஸ். பரஞ்சோதி, சிவப்பிரகாசம்கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். அருளப்பு, பிரதேச சபை உறுப்பினர் கே. தோமஸ், பிரதேச சபைச் செயலர் ரி. தில்லைநாதன் உட்பட பலர் உரையாற்றினர்.

முன்னதாக நெடுந்தீவு மத்தி பெருக்கடி ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்திலும் புனித யுவானியார் ஆலயத்திலும் விசேட பூசைகள் இடம்பெற்றன.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவதாசன் உட்பட ஏனைய விருந்தினர்களும் பிரதேச சபை உறுப்பினர்களும் புனிதயுவானியார் ஆலய வீதியில் இருந்து றோ. க. மகளிர் பாடசாலை மாணவர்களின் பான்ட்வாத்திய இசையுடன் ஊர்வலமாக விழாமண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

பாடசாலை மாணவ மாணவியரின் விசேட கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

(ஐ-111)

[illegible]

# பாராயோ முருகா!

ராகம்—காம்போதி தாளம்—ஆதி

பல்லவி

மலைவாழும் உமைபாலா குமரையனே!—என்
நிலைமையைப் பாராயோ முருகையனே!—நெடு
—(மலை......)

அனுபல்லவி

தலையான நல்லூரில் நிறைவேலவா— வளர்
கலைவாழும் தொல்லூரில் வளர்வேலவா—உயர்
—(மலை......)

சரணம்

அலையென்னத் துன்பங்கள் தொடர்கின்றதேன்?—
எனைத்
தொலையென்று துயரங்கள் படர்கின்றதேன்?—
வீசும்
வலையென்று இன்னல்கள் இழுக்கின்றதேன்?—
இதைச்
சிலையென்னப் பார்த்தின்னும் இருக்கின்றதேன்?—
குமரா!
—(மலை......)
அலைக்குமென் துயரோட்ட மறுக்கின்றதேன்?—
கண்டு
மலைக்குமென் நிலைபார்க்க மறக்கின்றதேன்?—
பத
நிழல்தந்து என்னைக்காக்கத் தவிர்க்கின்றதேன்?—
உன்
கழல்தந்து என்னையேற்கா திருக்கின்றதேன்?—
முருகா!
—(மலை......)

—ச. முருகையா

# வெல்லு மெய் ஞானம் நீயே!

சொல்லிற்குப் பொருளும் நீயே!
சுந்தரத் தமிழும் நீயே!
வல்வினை தீர்ப்பாய் நீயே!
வரந்தரு தருவும் நீயே!
நல்லூரின் நற்றுணையும் நீயே!
நம துயிர் காப்பாய் நீயே!
வெல்லு மெய் ஞானம் நீயே!
வெவ் துயர் தீர்ப்பாய் நீயே!

அரியாலையூர், வே. ஐ. வரதராஜன்

# மலத்தியோன் விசிறல்

செம்பியன்பற்று, ஒக. 10

வடமராட்சி கிழக்கு, அம்பன், செம்பியன்பற்று தெற்குப் பகுதிகளில் மலத்தியோன் விசிறும் பணி நடைபெற்று வருகின்றது.

(ஐ-36)

# ஐஸ்கிறீம் வியாபாரி காயம்

நெல்லியடி, ஒக. 10

மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த ஐஸ்கிறீம் வியாபாரி ஒருவர் இராணுவ தடைமுகாம் பகுதியில் மோதுண்டதனால் நெற்றியில் படுகாயமடைந்தார். மோட்டார் சைக்கிளும் சேதமானது.

இச் சம்பவம் கடந்த சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் வல்லைச் சந்திக்கு அருகில் இடம்பெற்றது.

அச்சுவேலியிலிருந்து ஐஸ்கிறீம்பெட்டிகளை மோட்டார் சைக்கிளில் கட்டிக்கொண்டு வடமராட்சிப் பகுதிக்குச்சென்று கொண்டிருந்த வட்டுக்கோட்டையைச்சேர்ந்தவேலுப்பிள்ளை விக்கினேஸ்வரன் (வயது 23) என்பவரே காயமடைந்த நிலையில் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-109)

## உதயவாக்கு

ரோஜாச் செடியில் முள் இருக்கிறதே என்று குறைப்படாதே. முட்செடியிலும் அழகிய மலர் இருக்கிறது என்று அறிந்து மகிழ்ச்சி கொள்.

- ஔவையார்

## நாளை

ஆடி - 26
செவ்வாய்க்கிழமை
திதி: சதுர்த்தி
பின்னிரவு 01.04 வரை.
நட்சத்திரம்: பூரட்டாதி
முற்பகல் 09.13வரை.
சங்கடகரகணபதி விரதம்
சுபநேரம்: 10.34 - 12.04
ராகுகாலம்: 03.04 -04.34
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)




# நல்லூரில் நல்ல மருந்து!

நல்ல மருந்தொடு குரு மருந்தை
நான் நல்லூரில் கண்டேனே

எல்லையில்லாப் பிணி தீர்க்கும் மருந்து
இம்மை மறுமைக்கும் ஏற்ற மருந்து

இல்லை யெனாது கொடுக்கும் மருந்து
ஏழையடியார்க் கிரங்கு மருந்து.

—யோகர் சுவாமிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகி மாண்புறு மாதா
# திருமதி யோகரத்தினம் செல்லையா



## பல்லாண்டு வாழ்க!

ஜீவராசிகளுக்கெல்லாம் இனிய தோழியாய்
கைப்பிடித்த மணாளனின் அன்பிற்கினிய
துணைவியாய்
ஈரிரு புத்திரரின் பாசமிகு அன்னையாய்
சிறார்களின் நல்வாழ்விற்கு வழிகாட்டும்
நல்லாசிரியையாய்
எம் இதயத்தில் சுடர்விடும் துருவ நட்சத்திரமாய்
வையத்தில் வாழ்வாங்கு வாழ்கின்ற
இன்றைய மணிவிழா நாயகியே - நாயகனுடன்
பன்னெடுங்காலம் அன்பின் சிறப்புணர்தி
வாழ்க! வாழ்க!

திரு. அ. அலெக்சாந்தர்
அதிபர்,
சில்லாலை.

## அகவை அறுபது காணும் அறிவகத்தின் அன்னை

தென்மராட்சித் திருப்பதியில் புகழ் பூத்த குடும்பத்தில் உதித்து, நல்லாசிரியப் பணியாற்றி, சிறப்போடு திகழ்பவர் திருமதி யோகரத்தினம் செல்லையா அவர்கள்.

செயல் வீரன் அதிபர் அ. பொ. செல்லையாவின் வாழ்க்கைத் துணை நலமாய் விளங்குவதோடு, சிறந்த ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றி மாணவர்கள் மனதில் மதிப்புப்பெற்ற அம்மையார் அவர்கட்கு அகவை அறுபது நிறைவு பெறுவது அறிந்து வாழ்த்துவதில் அகமகிழ்கின்றேன்.

'அறிவகம்' என்னும் அவரது திருமனையில் என்றும் அறிஞர்களும், மாணவர்களும், ஆதரவுதேடி வருபவர்களும் அம்மையாரின் உபசரிப்பை அனுபவிப்பர்.

''முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி
அத்தானாம் இன்சொல் இனிதே அறம்''

என்ற வள்ளுவர் வாக்குக்கு அமைய இனியவை கூறி எவரது இடர்களையும் களைய முயலும் இனிய சுவாபமுடையவர் அம்மையார்.

இடப்பெயர்வு காலத்தில் அவரது அகன்ற வளவு முழுவதும் பலரை ஆதரித்துப் பணிசெய்த நாள்களை மறக்க இயலாது. செல்லையா ஆசிரியத் தம்பதிகளிடம் பயன்பெற்று உயர்ந்தவர்கள் பலர். பலரது வாழ்த்துக்குரிய ஆசிரியத் தம்பதிகள் என்றும் சிறப்புடன் வாழ இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

ஆசிரியத் தம்பதிகள் பல மாணவர்களுக்கு உதவியதன் பயனாக இன்று இவர்கள் தம் புதல்வர்கள் கல்வியில் வல்லவராய் உயர் பல்கலைக்கழகங்களில் கற்று மிகச் சிறந்த நிலையில் வாழ்கிறார்கள்.

கனடா நாட்டில் 'தமிழன் வழிகாட்டி' என்ற வழிகாட்டும் அகராதியைக் கணனியில் படைத்து, கனடா பாராளுமன்ற உறுப்பினர்களால் வழங்கப்பட்ட சமூக விருதைப்பெற்ற செந்திலாதன் இவர்களின் மைந்தர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆறு. திருமுருகன்

## மனதார வாழ்த்துகின்றோம்

அகவை அறுபதிலும் அகமும் முகமும் மலர்ந்த சிரிப்புடன், அன்பும் அரவணைப்பும் அக்கறையும் ஆர்வமும் நிறைந்த பார்வையுடன் ஆறுதல் வேண்டும் ஜீவன்களுக்கெல்லாம் தன் அனுகூலம் கருதாது அணைத்து நிற்கும் அன்பு வடிவமே திருமதி யோகரத்தினம் செல்லையா.

மணாளனின் மனக்கிடக்கைகளிற்கு மாறின்றி, மற்றையோர் பண்புகளையெல்லாம் பகுத்தறிந்து பாங்குடனே பணிகளாற்றிப் பார்புகழ வாழ்ந்து வரும் பெண்ணினல்லாளின் பெருமைகளோ பற்பல. நல்லதோர் மனையாம் மீசாலையூர் அறிவகத்தின் இல்லத்தரசியாக மிளிர்ந்து தேடி வருவோருக்கு நாடித்துணைபுரியும் நங்கையிவர். மனையறத்தின் வேராக நின்று அ. பொ. செ. என்ற பெருவிருட்சம் அறிவுலகிற்கு ஆறுதல் தர இவர் ஆதாரமாகினார். நான்கு பெருவிழுதுகள் பலமாக வளர்ந்து விருட்சத்தைத் தாம் தாங்க முனைந்தாலும், வேரிலேயே விருட்சம் விருப்புடன் வியாபித்துள்ளது.

இவ் வியத்தகு அறிவும், அன்பும், அழகும் நிறைந்த வேரும் விருட்சமும் பன்னெடுங்காலம் வாழ்ந்து பாருக்குப் பயன் தரு பணிகள் புரியப் பரமன் அருள் வேண்டி பாசத்துடன் பணிந்து பாராட்டுகின்றோம்.

பு. ஸ்ரீ விக்கினேஸ்வரன்
அதிபர்
வரதராசப் பெருமாள் வித்தியாலயம்
பொன்னாலை.

## தாய் எனுந் தெய்வம்

''பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே''
— பாரதியார்

அன்பும், அருளும், பரிவும், இரக்கமும், தூய்மையும், மென்மையும், தியாகமும் ஆகிய சிறந்த உயிரோட்டமான பண்புகள் அனைத்தும் ஒருங்கே அமைந்து விளங்கும் இடந்தான் தாய். அதனாலே தான் ''தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை'' என்று தாய்க்குத் தனியிடமும், தனிமதிப்பும் கொடுக்கப்பட்டுள்ளது.

குடும்ப, சமூக, அரச வாழ்வில் நலம் தரும் பண்பாட்டு விழுமியங்களைப் பேணிப் பாதுகாத்து தந்தையோடு பங்காளியாகி வளர்ப்பவள் அன்னையே. தாய் தன் குழந்தைகள் செய்யும் தவறுகளைக் குறும்புகளாக எடுத்துக் குறுநகை புரிந்து - அன்பு செலுத்தி - நல்வழி நல்கி - கல்வி ஊட்டி - நலம் செய்து சான்றோராக்குகின்றாள்.

தாய்ப்பால், தாலாட்டு, தாயென்ற நினைவில் எழும் குழந்தைப் பருவ வாழ்க்கை எண்ணங்கள் சிறுவர் முதல் முதியோர்வரை என்றும் மனதைக்களி கொள்ள வைக்கும்.

எங்கள் அம்மா அவர்களுக்கு இன்று அகவை அறுபது! ஐயா அவர்களுடன் மகிழ்வாக மணிவிழாக் காண்கிறார். எங்களை ஆளாக்குவதில் அம்மா காட்டிய அன்பு, பரிவு அளப்பரியது. ஐயா தீட்டிய பாதையில் அம்மா காட்டிய வழி எம்மை நன்னிலையில் நல்லின்பத்தில் வைத்துள்ளது. மணி விழாக் கண்ட அம்மா பவள விழாக் காண இயற்கை அன்னை எல்லா நலன்களையும் நல்கிட இறைமாட்சி ஆட்சி செலுத்திட அம்மாவின் தாள் பணிந்து வணங்குகின்றோம்.

**மக்கள்**

செ. மாறன் செ. செந்திலாதன்
செ. சேரலாதன் செ. கிள்ளிவளவன்

## கடமை, கண்ணியம் மிக்கவர்

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் ஆற்றல் மிக்க பழைய மாணவியாகவும், போற்றத்தக்கஆசிரியையாகவும்மிளிர்ந்து நிற்கின்றவர்தான் திருமதி செல்லையா யோகரத்தினம் அவர்கள். அறிவியல் அதனில் ஆற்றல் பெற்று, ஆங்கிலமொழியில் புலமைபெற்றுக் கடமை, கண்ணியப் பண்போடு நிறைவான ஆசிரியையாக நிமிர்ந்து நின்று தனக்கெனவோர் தனியான தானத்தினைத் தட்டிக் கொண்டவர்.

ஆசிரியத் தொழிலை எமது வித்தியாலயத்தில் தொடங்கிச் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நிறைவு செய்தவர். பின்னர், பகுதிநேர ஆங்கில ஆசிரியராக இவ் வித்தியாலயத்தை அலங்கரித்து அனைத்து ஆசிரியர்கள், மாணவர்களின் அன்பையும், மதிப்பையும் பெற்றவர்.

கருமமே கண்ணான பெருந்தகைமை மிக்க இவர் ஊற்று நல்லாசான்கள், கற்றதன் மாணவர்கள், உற்றார், உறவினர் முதலானோரின் நன்மை தீமைகளிலே அக்கறையோடு பங்கெடுத்திடும் மனிதநேயமிக்க மாண்பினராகவும் விளங்குகின்றார். வலிகாமம் இடம்பெயர்வுக் காலத்தில் இவரது சேவை அளப்பரியது!

இன்று மணிவிழாக் காணும் மணியன்ன இவ்வன்னையைவாயார வாழ்த்தி, உளமாரப் போற்றுவதில் யான் மிகுந்த பெருமிதங்கொள்கின்றேன்.

சி. கந்தசாமி.
அதிபர்
மீசாலை.

(சி-4506)

## 'குமண' கப்பலில் 19 வாகனங்கள்

வடமராட்சி, ஓக. 10

'குமண' கப்பலில் எடுத்து வரப்பட்ட தனியாருக்கான வாகனங்கள் பருத்தித்துறை துறைமுகத்தில் வைத்து இறக்கப்படவுள்ளன.

கார், எல்ப் வான், உழவு இயந்திரம் உட்பட சுமார் 19 வாகனங்கள் கொழும்பிலிருந்து இக் கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

தற்போது காங்கேசன் துறையில் பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கும் இக் கப்பல் சில தினங்களில் பருத்தித்துறைக்கு வந்து இவற்றை இறக்கிச் செல்லும்.

(ஐ-173)

## கோழிக்குஞ்சு பொரிக்கும் இயந்திரம்

சண்டிலிப்பாய், ஓக. 10

தெல்லிப்பழை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட உதவித் திட்டத்தின் கீழ் கோழிக்குஞ்சு பொரிக்கச் செய்யும் இயந்திரம் ஒன்று வழங்கப்படவுள்ளது.

இதேவேளை — சுன்னாகத்தில் தற்போது இயங்கிவரும் மேற்படி சங்கப் பணிமனை விரைவில் வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்திற்கு முன்பாகவுள்ள கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக சங்கத் தலைவர் தெரிவித்தார்.

(ஐ-135)

## அன்னசத்திரம் புனரமைப்பு

கொழும்புத்துறை, ஓக. 10

ஈழத்துச் சித்தர்களில் முதன்மைபெற்றவராகிய கடையிற் சுவாமிகளது குருவார அன்னசத்திரமும், சிவன் கோயிலும், மடமும் புனரமைக்கப்படவுள்ளன. முதற் கட்டமாக வைரவர் கோயிலும், பிள்ளையார் கோயிலும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இதற்கு உரிய வேலைத் திட்டங்களில் பங்கு கொள்ள விரும்புபவர்கள் கோயில் நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு உதவலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-30)

ஓம் நமசிவாய

## நன்றி நவிலல்

கடந்த 22 – 07 – 98 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரும், மில்க்வைற் ஸ்தாபன அதிபருமாகிய தேசாபிமானி

### க. கனகராசா (J.P)

அவர்களின் சுகயீனத்தின்போது உதவி செய்த யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்களுக்கும், உத்தியோகத்தர்களுக்கும், இறுதிச் சடங்கில் பங்கு பற்றிய பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள், நிறுவனங்கள், உறவினர்க்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டும், மலர் வளையம், மாலைகள் சாத்தியும், இரங்கற் செய்தி விடுத்தும் அவர்தம் பெருமையை நினைவு கூர்ந்து பத்திரிகையில் அஞ்சலி செய்தோர்க்கும் எமது இதய பூர்வமான நன்றிகள்.

– மில்க்வைற் குடும்பத்தினர்

'திருவாலவாய்',
யாழ்ப்பாணம்.

(58241)

## நன்றி நவிலலும் 31-ம் நாள் நிகழ்வுகளுக்கான அழைப்பும்



| உதயம் | அஸ்தமனம் |
|---|---|
| 01 – 06 – 1904 | 12 – 07 – 1998 |

அமரர்

### தம்பையா ஐயாத்துரை

எமது குடும்பத் தலைவரின் இறுதி நிகழ்வுகளில் நேரில் பங்கு கொண்டும், பத்திரிகையிலும், துண்டுப் பிரசுரமாகவும் கண்ணீர் அஞ்சலி செலுத்தியும், தபால் தந்தி மூலமாகவும் வேறு விதங்களில் ஆறுதல் அளித்தவர்களுக்கும் எம் இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

11 – 08 – 1998 செவ்வாய்க்கிழமை நிகழவிருக்கும் 31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அழைக்கின்றோம்.

திருமதி இரத்தினம்மா ஐயாத்துரை
திரு. திருமதி சண்முகலிங்கம்
(நெல்லியடி ம. ம. வி/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)
திரு. திருமதி கந்தலிங்கம்
திரு. திருமதி குமாரலிங்கம்.

''இரத்தினபவனம்''
குப்பிளான், ஏழாலை.

(58239)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினை தீர்வில் உலக தலையீடு

# தொழிற் சங்கங்கள் இணைந்து இந்திரஜித் குப்தாவுக்கு மகஜர்!

## இன்று கையளிக்க ஏற்பாடு

கொழும்பு, ஓக. 10

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசும் விடுதலைப்புலிகளும் உடனடியாகப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க உலகத் தலைவர்களின் ஒத்துழைப்பைக் கோரும் மகஜர் ஒன்றை இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இந்திரஜித் குப்தாவிடம் இலங்கை கூட்டுத் தொழிற்சங்க சம்மேளனம் இன்று கையளிக்கவுள்ளது.

கூட்டுத் தொழிற்சங்க சம்மேளனத்தின் செயலாளரும், பிரதான அமைப்பாளருமான மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் எஸ். அலவி மௌலானா இந்த மகஜரை திரு. குப்தாவிடம் ஹோட்டல் ஹொலிடேனில் வைத்து இன்று கையளிப்பார்.

உலக தொழிற்சங்க சம்மேளனத்தின் முன்னோடி உறுப்பினரான திரு. குப்தா உலக நாடுகளிலுள்ள பல்வேறு தொழிற்சங்கத் தலைவர்களுடனும் சர்வதேச ஸ்தாபனங்களுடனும் மிகவும் நெருங்கிய தொடர்புடையவர். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியினதும், லங்கா தொழிற் சங்கங்களின் சம்மேளனத்தினதும் தலைவர்களுள் ஒருவரான அமரர் எல். டபிள்யு. பண்டிதவின் பத்தாவது சிரார்த்த தினத்தில் கலந்து கொள்ளவே அவர் இங்கு வருகிறார்.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக கையளிக்கப் படவுள்ள இந்த மகஜர் குறித்து அமைச்சர் அலவி மௌலானா தெரிவித்ததாவது:-

இலங்கை இனப்பிரச்சினைக்கு முடிவுகட்ட வேண்டுமென்பதை உலக நாடுகளின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டியுள்ளது. இந்தப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வைக் காண்பதற்கு உலக நாடுகள் தமது ஆதரவையும் ஒத்துழைப்பையும் நல்கவேண்டிய கட்டாயத் தேவையுள்ளது.

தொழிற் சங்கங்கள் இன, மத, மொழி, வேறுபாடுகளின்றியே கருமமாற்றுகின்றன, எனவே இந்தப் பிரச்சினையில் உலகத் தொழிற் சங்க சம்மேளனம் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி தத்தமது நாட்டுத் தலைவர்களுக்கு இந்தப் பிரச்சினைக்குத் தீர்க்கமான முடிவு காணப்படவேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும். அதன் மூலம் அந்நாட்டுத் தலைவர்களை இனப்பிரச்சினை தீர்வு முயற்சியில் இலங்கைக்கு உதவச் செய்யலாம். இந்த வகையிலேயே இந்த மகஜரை திரு. குப்தாவிடம் கையளிக்கின்றோம். எமது கூட்டுத் தொழிற் சங்கத்தில் 21 சம்மேளனங்கள் அங்கம் வகிக்கின்றன. எம். ஈ. பி, ந. ச. ச. க. ஸ்ரீல. மக்கள் கட்சி, ஸ்ரீல, சு, க, ஆகிய பிரதான கட்சிகள் அங்கத்துவம் பெற்றுள்ள இச் சம்மேளனத்தினர் அரசியற் பேதங்களை மறந்தே இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்றார். (ஐ-10)

## நீரிழிவு மருந்து

நெல்லியடி, ஓக. 10

மந்திகை மருத்துவமனைக்கு யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஒரு தொகுதி நீரிழிவு நோயாளிகளுக்குரிய மருந்து வகைகளை கடந்தவாரம் அனுப்பிவைத்துள்ளார்.

இதேவேளை இங்கு சிகிச்சைக்கு வரும் மனநோயாளிகளுக்குரிய மருந்து வகைகள் யாவும் முடிவடைந்துள்ளன. (ஐ-109-173)

## நுண்கலைத்துறை மாணவர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 10

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத்துறை இறுதி வருட மாணவர்களுக்கான கலந்துரையாடல் இன்று முற்பகல் 11. 00 மணிக்கு நுண்கலைத் துறைக் கலையரங்கில் நடைபெறும்.

இந்த கலந்துரையாடலில் நுண்கலைப் பீட இறுதியாண்டு மாணவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (இ-8)

## தேர்தலை நம்பி வேலையை இழந்த வேட்பாளர்கள்

கொழும்பு, ஓக. 10

மாகாணசபைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டதால் சில வேட்பாளர்கள் இக்கட்டான நிலையை எதிர்நோக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சிலர் தமது வேலைகளை இராஜினாமாச் செய்த பின்னரே வேட்புமனுத் தாக்கல் செய்திருந்தனர்.

தற்போது தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளமையினால் இவர்கள் தமது முன்னைய வேலையும் இன்றி பெரும் இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது. (இ-9)

## வலைப் பந்தாட்ட இறுதி ஆட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 10

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் ராஜா கிறீம் ஹவுஸின் அனுசரணையுடன் நடத்தப்பட்டு வந்த வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவிருக்கின்றது.

இந்த நிகழ்வுக்கு சிரேஷ்ட மாணவ ஆலோசகர் திருமதி ஆர். கைலைநாதன் பிரதம விருந்தினராகவும், பதில் துணை வேந்தர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் சிறப்பு விருந்தினராகவும் பங்கு பற்றுவர்.

இறுதி ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியும், அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியும் மோதவுள்ளன. (இ-3)

## கிரிக்கெட் மைதானம் திறந்து வைப்பு

சாவகச்சேரி, ஓக. 10

மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயத்தில் அண்மையில் கிரிக்கெட் மைதானம் ஒன்று சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு பாடசாலை அதிபர் சி. நாகராசாவின் தலைமையில் நடைபெற்றது.

தென்மராட்சிக் கோட்டக் கல்வி பிரதிக் கல்விப்பணிப்பாளர் இ. கணேசன் பாடசாலை அதிபர் சி. நாகராசா பந்து வீச துடுப்பாடி மைதானத்தைத் திறந்துவைத்தார். (இ-3)

## சிவபாலன் உட்பட 12 மேயர்கள் ஜனாதிபதியை நாளை சந்திப்பர்

கொழும்பு, ஓக. 10

யாழ். மேயர் சிவபாலன் உட்பட 12 மேயர்கள் நாளை மாலை அலரி மாளிகையில் ஜனாதிபதியைச் சந்திக்கின்றனர்.

ஜனாதிபதியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தச் சந்திப்புக்கு மாநகர முதல்வர்கள் கூட்டாகச் செல்வார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இச் சந்திப்புக்கு முன்பு சகல மாநகர முதல்வர்களும் கொழும்பு மாநகர முதல்வர் கருஜயசூரியவின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் கூடுவார்கள். ஜனாதிபதியுடன் பேச வேண்டிய பொதுவான விடயங்கள் குறித்து ஆராய்ந்த பின்பு அவர்கள் கூட்டாக அலரி மாளிகைக்கு செல்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நாளைய சந்திப்பின்போது மட்டக்களப்பில் இராணுவத்தினரால் பயன்படுத்தப்படும் மாநகரசபையின் கட்டடம், விடுதிகள் மாநகரசபையின் உடைமைகள் ஆகியவை மீள ஒப்படைக்கப்பட வேண்டும் என்று மட்டக்களப்பு மாநகர முதல்வர் செழியன் பேரின்பநாயகம் ஜனாதிபதியிடம் நேரடியாகக் கோரிக்கை விடுக்கவிருக்கின்றார்.

நாளை மாலை ஜனாதிபதி சகல மாநகரசபை முதல்வர்களையும் சந்தித்து பேசும் போது செழியன் பேரின்பநாயகம் வலியுறுத்தவுள்ள விடயங்கள் வருமாறு:-

★ மாவட்ட உள்ளூராட்சி சபை தலைவர்களிடமிருந்து வாபஸ் பெறப்பட்ட பொலீஸ்பாதுகாப்பு குறித்து மீள் பரிசிலனை செய்தல்;

★ சபையில் ஏற்பட்டுள்ள 73 ஆளணி வெற்றிடத்தை நிரப்புதல்.

★ நவீன ரக கழிவு அகற்றும் இயந்திரங்களை வழங்குதல்;

★ மாநகர முதல்வர், ஆணையாளர் ஆகியோருக்கு உத்தியோகபூர்வ வாகனங்களை வழங்குதல். (இ-21)

## திருமலை சந்தைக் கட்டடதொகுதியை திறப்பது குறித்து நாளை பேச்சு

### நகரசபை தலைவரை பிரிகேடியர் சந்திப்பார்

மட்டக்களப்பு, ஓக. 10

திருகோணமலை நகரசபையின் புதிய சந்தை கட்டடத் தொகுதியைத் திறப்பது குறித்து மாவட்ட இணைப்பதிகாரி பிரிகேடியர் நிகால் குலதுங்க நகரசபைத் தலைவர் பெ. சூரியமூர்த்தியுடன் நாளை பேசவிருக்கிறார்.

49 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இச் சந்தை கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 13 ஆம் திகதி திறக்கப்படவிருந்தது.

இறுதி நேரத்தில் இணைப்பதிகாரியினால் இதற்கு தடை விதிக்கப்பட்டது.

நகர சபை தலைவர் சூரியமூர்த்தி இது பற்றி ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

ஜனாதிபதி செயலக பணிப்புரையின் பிரகாரம் நாளை நடைபெறும் பேச்சு வார்த்தைக்கு வடக்கு — கிழக்கு மாகாண பிரதமசெயலாளர் ஜி. கிருஷ்ணமூர்த்தி, திருகோணமலை அரசாங்க அதிபர் டி. எம். சந்திரதாஸ ஆகியோரும் கலந்து கொள்கின்றார்கள்.

மக்களின் வரிப்பணத்தில் நிர்மாணிக்கப்பட்ட சந்தைக் கட்டடத் தொகுதியைத் திறப்பதுதான் மிக முக்கியமானது என இப்பேச்சுவார்த்தையில் வலியுறுத்தப்படும் என நகரசபை தலைவர் தெரிவித்தார். (இ-21)

## வங்கி பெறும் வட்டி பொருளாதார வளத்துக்கு

ஏனைய வங்கிகளைப் போல மக்கள் வங்கியும் வாடிக்கையாளரிடமிருந்து வட்டியைப் பெற்றாலும் அவ் வட்டியில் கணிசமான தொகையை மக்களின் பொருளாதார வளத்தைப் பெருக்குவதற்குச் செலவிடுகின்றது.

அண்மையில் நீர்வேலியில் மக்கள் வங்கியின் நடமாடும் சேவை ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வில் தாம் மேற்கண்டவாறே கூறியதாக மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் கிங்ஸ்லி இராசநாயகம் அறிவிக்கின்றார்.

''மக்களின் பொருளாதார வளர்ச்சியில் மக்கள் வங்கிக்கு அதிக அக்கறை'' என்ற தலைப்புடனான 4 - 8 - 98 ஆம் திகதிய உதயன் செய்தியில் —

''ஏனைய வங்கிகளிலும் பார்க்க மக்கள் வங்கி மக்களிடமிருந்து கணிசமான வட்டியைப் பெற்று மக்களுக்குச் சேவையாற்றுவதன் மூலம் மக்களின் பொருளாதார வளத்தைப் பெருக்க உதவுகின்றது'' என்று தமது பேச்சின் ஒரு பகுதியாகக் குறிப்பிட்டது சரியானது அல்ல என்று தெரிவித்தே அவர் ஒரு குறிப்பினை அனுப்பியுள்ளார்.

முந்தியதை மேலே — முதலாவது பந்தியில் — உள்ளது போலத் திருத்தி வாசிக்கவும். (ஆ)

## ஒரு பகுதி திருத்தம்

வலி. தென்மேற்கு, ஓக. 10

நவாலி விவசாயிகள் சம்மேளனத்தினால் மேற்கொள்ளப் பட்டுவரும் வாய்க்கால் திருத்த வேலைகளின் ஒரு பகுதி முடிவடையும் தறுவாயில் உள்ளது. (இ-185)

## ஆரம்ப சுகாதார நிலையம்

சுதுமலை ஓக. 10

ஆனைக்கோட்டை சாவற்கட்டு பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது.

இதனை அமைப்பதற்காக அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் 5 இலட்சம் ரூபா நிதி உதவி வழங்கி உள்ளது. (இ-139)

## நல்லூரில் நிகழ்ச்சி மாற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 10

நல்லூர் உற்சவ காலத்தையொட்டி இளம் கலைஞர் மன்றம் துர்க்காமணி மண்டபத்தில் நடத்தி வரும் தெய்வீக இசையரங்கில் இன்றைய நிகழ்ச்சியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என இளம் கலைஞர் மன்றம் தெரிவித்துள்ளது.

தவிர்க்க முடியாத காரணத்தால் இன்று நடைபெறவிருந்த இசைக்கச்சேரி ஒத்திவைக்கப்பட்டு பி. ரஜீந்திரனின் நாதசுரக்கச்சேரி இடம்பெறும். அவருடன் ஆர் சிவகுமார் சேர்ந்து வாசிப்பார் எஸ். சொர்ணலிங்கம் எஸ். முருகையா, ரி. ஜெயகுமார், ஆகியோர் தவில் வாசிப்பர்.

(முன்வந்த செய்தி 6 ஆம் பக்கத்தில்)

(இ-6)

## வங்கியில் கொள்ளை

கம்பஹா மாவட்டத்தில், யக்கல என்னுமிடத்திலுள்ள தனியார் வங்கி ஒன்றில் நேற்றுமுன்தினம் இரவு ரூபா 20 லட்சம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

கொள்ளையர்கள் பாதுகாப்பு உத்தியோகத்தரை படுகொலை செய்து விட்டே இந்த கொள்ளையை நடத்தி உள்ளனர். (இ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலைப்பட்டியலில் எனது பெயரும் என்றால் யுத்தம் மலையகத்துக்கும் வந்துவிட்டது என்பதே அர்த்தம்

## தொண்டமான் கூறுகிறார்

கொழும்பு, ஒக. 10

விடுதலைப் புலிகளின் கொலைப்பட்டியலில் எனது பெயரும் உள்ளது என்று கூறப்படுவதில் உண்மை இருந்தால், யுத்தம் கூடிய விரைவில் மலையகப் பகுதிகளுக்கும் தனது ஆதிக்கத்தை செலுத்தப் போகின்றது என்பதே அர்த்தமாகும்.''

இ. தொ. கா. தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.

விடுதலைப் புலிகளின் கொலைப்பட்டியலில் அமைச்சர் தொண்டமானின் பெயரும் இருப்பதாக நாடாளுமன்றத்தில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்தை வெளியிட்ட கருத்துத்தொடர்பாகவே அமைச்சர் தொண்டமான் மேற்கண்டவாறு தெரிதார்.

அவர் மேலும் கூறியதாவது:

இலங்கை முழுவதும் இன்று பல்வேறு சம்பவங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. மலையகப் பகுதிகளிலும் ஆங்காங்கே சிறுசிறு சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. இவை தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களே என் பெயரும் கொலைப்பட்டியலில் இருப்பதாக கூறியுள்ளனர்.

எவ்வாறாயினும்மலையகப் பகுதிகளில் இது வரை காலம் எதுவித வன்முறைகளும் இடம் பெறவில்லை. இப்படியான காலகட்டத்தில் மலையகத்தில் ஊடுருவ முயற்சிக்கும் புலிகளுக்கு நாம்இடைஞ்சலாக இருக்கலாம் தானே. எனவே இப்படியான முடிவை அவர்கள் எடுத்திருக்கக்கூடும். இவ்வாறானகூற்றுக்கள் உண்மையாகவும் இருக்கலாம் பொய்யாகவும் இருக்கலாம்.

அவை பற்றி நான் அலட்டிக் கொள்ளப் போவதில்லை என்றாலும் வன்முறைகளை நான் ஒருபோதும் ஆதரிக்கப் போவதில்லை. காலம் தான் அவற்றிற்கு பதில் சொல்ல வேண்டும்.

இதேவேளை அரசாங்கம் புலிகள் இயக்கத்தினருடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளைநடத்த வேண்டும். அதுவும் எதுவித முன்நிபந்தனைகளுமின்றி பேசவேண்டும். கூடியவிரைவில் நாட்டுக்குச் சமாதானம் தேவை எனில் அரசு புலிகளை அழைத்து பேச வேண்டும். இது தான் எனது நிரந்தர நிலைப்பாடாகும்.

வடக்கு — கிழக்கில் ஒரு பிரச்சினை உண்டு என்றபடியாலேயே அரசு தேர்தலை ஒத்திவைத்துள்ளது. இது ஒரு தற்காலிக ஒத்திவைப்பாகும்.

அத்துடன் வடக்கு-கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டு நீண்ட நாள்களாகின்றன. அது குறித்து எவரும் அக்கறை கொள்ளவில்லையே? எனவே மாகாண சபை தேர்தல் சந்தர்ப்ப சூழ்நிலைகாரணமாகவே பிற்போடப்பட்டுள்ளது.

இப்படி அவர் மேலும் கூறினார்.

(இ-3-10)

## மின்சார வெட்டு நேரம் திருடர் கைவரிசை

நள்ளிரவு வேளை மின்சாரம் நிறுத்தப்பட்ட நேரம் பார்த்து வீடொன்றினுள் புகுந்த திருடர் கோஷ்டி அங்கிருந்து தாலிக்கொடி, சங்கிலி, காப்பு, மோதிரம் போன்றவைகளை அபகரித்துக்கொண்டு தலைமறைவாகியது.

இத்துணிகரத் திருட்டுச்சம்பவம், கடந்த சனிக்கிழமை நள்ளிரவு 12.15 மணியளவில் கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் இடம்பெற்றது.

(இ-109)

# போரை நிறுத்தி சமாதான பேச்சை ஆரம்பிக்குக

## பிரதேச சபை தீர்மானம்

யாழ்ப்பாணம், ஒக. 10

போரில் ஈடுபட்டுள்ள அரசும், விடுதலைப்புலிகளும் போரை நிறுத்தி மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது மூலம் மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய சகஜ நிலையை உருவாக்கவேண்டும்.

மேற்கண்டவாறு அரசாங்கத்தையும், விடுதலைப் புலிகளையும் கோரும் தீர்மானம் ஒன்றை ஊர்காவற்றுறை பிரதேச சபை நிறைவேற்றியுள்ளது.

இந்தப் பிரதேச சபையின் முதலாவது கூட்டம் சபைத் தலைவர் நடராசா மதனராஜா தலைமையில் நடைபெற்ற சமயமே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அங்கு நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

★ சுமுகமான நிலை ஏற்படும் வரை நிவாரணம் வெட்டும் முடிவை ரத்துச் செய்ய வேண்டும் என்று அரசாங்கத்தைக் கோருதல்.

★ வடக்கு—கிழக்கு மாகாணத்தைப் பிரிக்காது இந்திய—இலங்கை ஒப்பந்தத்தின் 13 ஆவது அரசியல் சரத்தை முழுமையாக அமுல்செய்து அதிவிசேட அதிகாரங்கள் கொண்ட மாகாணசபையை உருவாக்கவேண்டும். அத்தகைய சபை உருவாக்கப்படும் வரை வடக்கு — கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாகசபை ஒன்று உருவாக்கப் படவேண்டும்.

★ ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் பாதுகாப்புப்படையினரின் ஒத்துழைப்பைக் கோருதல்.

(மற்றொரு செய்தி 7 ஆம் பக்கத்தில்)

(இ-3)

# வைத்திய அதிகாரியை நியமிக்க கோரிக்கை

வலிகாமம் மேற்கு, ஒக. 10

வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலைக்கு நிரந்தரமாக வைத்திய அதிகாரி ஒருவரை அல்லது உதவி வைத்திய அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலையில் நீண்ட நாள்களாக வைத்திய அதிகாரி நியமனம் செய்யப்படவில்லை.

இதனால் மாலை நேரங்களில் மட்டும் கொட்டைக்காடு அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி நோயாளர்களைப் பார்வையிடுகின்றார்.

வட்டுக்கோட்டை, மாவடி, மூளாய், சங்கரத்தை, துணைவி ஆகிய பகுதி மக்கள் மாலை நேரங்களில் வைத்தியசாலைக்குச் செல்வதில் சிரமங்கள் ஏற்படுகின்றன.

இந்த வைத்தியசாலைக்கு வைத்திய அதிகாரியை நியமிக்க முடியாவிட்டால் உதவி வைத்திய அதிகாரியையாவது நியமனம் செய்யவேண்டும்.

இப்படி ஏகமனதாக தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

பிரதேச செயலர் கா. சந்திரராசா வடபிராந்திய சுகாதார பணிப்பாளருக்கு இது தொடர்பாக கடிதம் எழுதியுள்ளார். (இ-175)

# மந்திகை ஆஸ்பத்திரியில் வைத்திய நிபுணர் இல்லை

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை நிபுணர்கள், மகப்பேற்று நிபுணர்கள் இல்லாத காரணத்தால் வடமராட்சிப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களையும், உயிரிழப்புக்களையும் சந்திக்க வேண்டிய நிலைமை இருந்து வருகிறது.

வடமராட்சிப் பகுதி முழுவதுக்கும் சகல நோய்க்குமான ஒரே ஒரு பெரிய வைத்தியசாலையாக அமைந்திருக்கும் இந்த வைத்தியசாலையில், சத்திரசிகிச்சைகூடம் அமைந்திருந்தும் சத்திரசிகிச்சை நிபுணர் இல்லாததால் அப்பிரிவு செயலிழந்துள்ளது.

சாதாரண சிறிய முறிவு, நெரிவுகளுக்குக் கூட யாழ். ஆஸ்பத்திரியை நாடவேண்டிய நிலையிலேயே வடமராட்சிப் பிரிவு மக்கள் உள்ளனர்.

இது போலவே பெண்நோயியல், மகப்பேறு போன்றவற்றுக்கும் இப் பகுதி மக்கள் யாழ். ஆஸ்பத்திரியையே நாடவேண்டியுள்ளது.

(இ-15)

# சித்திரவதைகள் குறித்து மன்னிப்புச்சபை அறிக்கை

கொழும்பு, ஒக, 10

கடந்த 1995 ஏப்ரல்மாதம் விடுதலைப் புலிகளுக்கும்அரச படைகளுக்குமிடையே மீண்டும் உள்நாட்டு யுத்தம் ஆரம்பித்த பின்னர் சித்திரவதைகள் மீண்டும் அதிகரித்துள்ளன.

இவ்வாறு சர்வதேச மன்னிப்புச்சபை அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

பயங்கரவாதத் தடைச் சட்டம் படையினருக்கு எல்லை மீறிய அதிகாரங்களை வழங்கியுள்ளது.

இதனால் கைது செய்தல், காரணமின்றி தடுப்புக் காவலில் வைத்திருத்தல், வரம்பற்ற மனித உரிமை மீறல்கள் போன்றவற்றுக்கு வழி வகுத்து வருகின்றது.

தமிழ் சமூகத்தைச் சேர்ந்த மக்கள் கொழும்பில் கைது செய்யப்பட்டதுக்கான நீண்ட விவரப்பட்டியல் உள்ளது.

கொழும்பு வீதிகளில் தமிழ் மக்கள் கைது செய்யப்படுவதும்—

பணத்தை லஞ்சமாகக் கொடுத்து விடுதலை செய்யப்படுவதும்—

உறவினர்கள் மற்றும் சட்டத்தரணிகள்சென்றுபார்க்க முடியாதவாறு சிறையில் அடைத்து வைக்கப்படுவதும் சாதாரணமாக நடைபெறுகின்றது.

விடுதலைப் புலிகளோடு தொடர்புள்ளவர்களென்று சந்தேகிக்கப்படுபவர்கள் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

சித்திரவதை காரணமாக விடுதலைப் புலிகள் ஆதரவாளர்களென்று குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தில் ஒப்பமிட்டு பலர் நீண்ட சிறைவாசம் அனுபவித்து வருகின்றனர்.

இப்படி சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

தஞ்சம் தேடி வந்தவர்கள் செனகல் நாட்டில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டதையும் சர்வதேச மன்னிப்புச் சபை கண்டித்துள்ளது.

இது சட்டத்துக்கு முரணானது என்பதை அந்த நாட்டிற்கு உணர்த்த நடவடிக்கை எடுப்பதாகவும் மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

சித்திரவதை இடம்பெறும் நாட்டிலிருந்து தப்பி ஓடி தஞ்சம் கோரிவரும் மக்களை வெளியேற்றவோ திருப்பி அனுப்பவோ முடியாது என்பது அனைத்துலக சட்டமாகும் இதனை மீற முடியாதென்றும் சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

(இ-6)


**எமது இன்றைய வீடியோ CD வெளியீடு!**

சத்தியராஜ்- குஷ்பூவின் **கல்யாண கலாட்டா**

மற்றும்

புதிய வெளியீடு!

சஞ்ஜய் நடித்த **சத்தியா**

புதிய படப் போஸ்டர்களும், உயிரே ஓடியோ CD களும் விற்பனைக்குண்டு.

**சுப்பஸோ வீடியோ**

யாழ்ப்பாணம்.

(சி/4510)


## ஹட்டனில்...

(முதலாம் பக்கத் தொடர்)

தாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தக் குண்டு வெடிப்பால் ரயில் எஞ்ஜினின் முன்பகுதி சேதமடைந்தது. 5 பெட்டிகள் பாதையைவிட்டு விலகின.

அந்தப்பகுதியில் உள்ள தண்டவாளத்தில் பொருத்தப் பட்டிருந்த 40 சிலிப்பர் கட்டைகள் உடைந்து சிதறின.

அந்த ரயில் என்ஜின் சாரதியும், அவரது, உதவியாளரும் காயமடைந்தனர்

ரயிலில் பயணம் செய்த 40 பயணிகள் தெய்வா தீனமாகத் தப்பினர்.

இந்தக் குண்டு வெடிப்பால் மலையகத்துக்கான ரயில் சேவைகள் யாவும் நேற்றுப் பாதிக்கப் பட்டன. பஸ்கள் மூலம் பயணிகள் பயணத்தை மேற் கொண்டனர்.

கொழும்பு - பதுளை ரயில் சேவையும் ரத்துச் செய்யப்பட்டது.

மூன்று அல்லது நான்கு நாள்களில் திருத்த வேலைகள் பூர்த்தியாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தை அறிந்தவுடன் போக்குவரத்து அமைச்சர் ஏ. எச். எம். பௌசி அங்கு சென்று சேதங்களைப் பார்வையிட்டார்.

''ரயிலின் நடுப்பகுதியில் குண்டு வெடித்திருந்தால் ரயில் பெட்டிகள் பள்ளத்துக்குள் விழுந்து பாரிய சேதம் ஏற்பட்டிருக்கும் என அவர் தெரிவித்தார்.

குண்டு ரயில் என்ஜினுக்குள் இருந்து வெடித்ததா? அல்லது தண்டவாளத்தில் வெடித்ததா? என்ற கேள்வி பொலிஸார் மத்தியில் எழுந்துள்ளதாகவும் [illegible] தெரிவித்தது.

(இ-3-21-6)

# செல்வச் சந்நிதி ஆலய உற்சவம்

நெல்லியடி, ஒக. 10

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர் வரும் 22 ஆம் திகதி காலை 8. 30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தினமும் உற்சவம் நடைபெற்று 25 ஆம் திகதியிலிருந்து காலையில் திருவிழா நடைபெறும்.

30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பூங்காவனமும், மறுநாள் காலை 10 மணிக்கு கைலாய வாகனமும், செப்ரெம்பர் 4 ஆம் திகதி வெள்ளி இரவு சப்பறமும், மறுநாள் சனிக்கிழமை காலை 8 மணிக்கு ரதோற்சவமும், 6 ஆம் திகதி காலை 10 மணிக்கு தீர்த்தமும், மறுநாள் மாலை மௌனத்திருவிழாவும் நடைபெற்று உற்சவம் நிறைவு பெறும்.

நாட்டு நிலைமை காரணமாக கடந்த காலங்களில் நடைபெறாதிருந்த நிகழ்ச்சிகளான பிரசங்கம், சமய சொற்பொழிவு, சங்கீதக் கச்சேரி, மேளக்கச்சேரி போன்றவற்றை இம் முறை ஆலய முன்றலில் நடத்த திட்டமிடப் பட்டிருப்பதாகவும்—

முருகன் அடியார்களின் நலன் கருதி உற்சவ நாள்களில் தினமும் பகல் 11மணியிலிருந்து பிற்பகல் 2 மணி வரை அன்னதானம்வழங்கப் படுமென்றும் — தெரிவிக்கப் பட்டது.

## செம்மணி...

(முதலாம் பக்கத் தொடர்)

பாடுகளைச் செய்து வருவதாகவும்—

ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து இந்தப் போராட்டத்தை நடத்த ஏற்பாடு செய்யப்படுகின்றது என்றும்—ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பு பிரமுகர் தெரிவித்தார்.

செம்மணி புதைகுழி போன்று கிழக்கில் மட்டக்களப்பு, அம்பாறை பகுதியிலும் புதைகுழிகள் உள்ளதாகவும் அவர் கூறினார்.

## மலையக இளைஞர்...

(முதலாம் பக்கத் தொடர்)

சம்பவம் நடந்த இடத்தில் இருந்து சுமார் 200 மீற்றர் தொலைவில் உள்ள ஹட்டன் தோட்டத்தில் இருந்தே ''றிமோட்கொன்ரோல்'' மூலம் குண்டு வெடிக்க வைக்கப் பட்டிருக்கலாம் எனப் பொலீஸார் கருதுகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக பல பொலீஸ் குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

மத்திய மாகாண விசேட புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-3-6-21)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறை வேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10-08-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org